MARUTHUVAN

மருத்துவன்

PHYSICIAN

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர்: பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. 1929௵ செப்டம்பர்௴ இதழ் கஉ.

உள்ளுறை

பிரசவ ஜன்னி 313

நிலாவாரை 327

புகையிலைச் சுருட்டு, சிகரெட், பீடி, மூக்குத்தூள் முதலியவை
களால் உண்டாகும் தீமைகள் 329

நீர்முள்ளி 332

மருத்துவ குலத்தவர் தொகுதி 334

பண்டிட் ஆனந்தம் அவர்களின் கார்ப்பொரேஷன்
தீர்மானங்கள் 338

தென் இந்திய மருத்துவர்சங்க நிகழ்ச்சிக் குறிப்பு 340

கள்ளுண்பவர் நஞ்சுண்பவரே 348

பாலர்பரிபாலனம்

மருத்துவன் காரியாலயம்

221, தங்கசாலை வீதி, சென்னை.

மருத்துவனின் சந்தாவிபரம்

மருத்துவன் இரண்டாவதாண்டு ஆரம்பத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்குத் தபாற்கூலியுட்பட உள்நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூபா. 2 0 0

பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆபிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா. 2 8 0

தனிக் காப்பி அணு 0 3 0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது. பத்திரிகை ஆங்கிலமாதக் கடைசியில் வெளிவரும்.

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை:—சந்தாதாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும் முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடுத் தெளிவாக எழுதவேண்டும்.

சந்தாத்தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி. பி. யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரிகைகள் வேண்டுமானல், இருக்கும் சஞ்சிகைகள்மட்டும் அனுப்பப்படும்.

நமது ஆபீசிலிருந்து பதில் வர விரும்புவோர் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்புதல்வேண்டும்.

கடிதம் எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள்சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதல்வேண்டும்.

விளம்பர விகிதம்

முழுப்பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	ரூ.	8 0 0
அரைப்பக்கத்திற்கு	,,	ரூ.	5 0 0
கால்பக்கத்திற்கு	,,	ரூ.	3 0 0

மானேஜர் :—

மருத்துவன் ஆபீஸ்,
221, தங்கசாலைத்தெரு, சென்னை.

ரா. தம்மையா
அவர்கள் கோவில்
தெரு
தென்காசி

உ

மருத்துவன்

(PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly

Editor : Pandit S. S. Anandam

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர் : பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. | 1929ஆம் செப்டம்பர்மீ | இதழ் கஉ

பிரசவ ஜன்னி

சென்னை சட்டசபைத் துணைத்தலைவர்

டாக்டர் எஸ். முத்துலட்சுமி அம்மாள்

அவர்களால் எழுதப்பட்டு

பண்டிட் ஆனந்தம் அவர்களால் பரிசோதிக்கப்பட்டது

நமது நாட்டில் பல பெண்கள் இளவயதிலேயே கருப்பெற்று பிரசவ ஜன்னி என்னும் நோயினால் சாகின்றார்கள். இதற்கு நம்மவர்களின் அறியாமையே காரணமாகும். ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த நோய்க்கு இரையானவர் சிலரைக் கணக்கிடலாம். தெரிந்தவர்கள், இந்த வியாதி வாராமல் தடுக்கக் கூடியதென்று அறிந்து, மறுபடியும் இந்நோய்க்குட்பட்டுக் கஷ்டப்படாவண்ணம் சரியான பரிகாரத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள். அறிவில்லாத மக்கள், இதன் காரணம் இன்னதென்று கண்டறியாமல், 'எல்லாம் விதியின் பயன்' என்று சும்மாவிருந்து துன்புறுகிறார்கள்.

இந்த நோயின் காரணத்தை யறியவேண்டுமென்றால், சிறிதேனும் மருத்துவ சாஸ்திரம் தெரியவேண்டும். அதைப்பற்றி இங்கே சற்று விவரிப்போம்.

தாயின் கருப்பையில் உள்ள சிசு, பிரசவ காலத்தில் வெளியே வர எத்தனிக்கிறது. இதை நம்மவர்கள் 'இடுப்புவலி எடுக்கிறது' என்று சொல்லுவார்கள். ஒவ்வொரு வலிக்கும் கருப்பை சுருங்குகிறது. கருப்பை சுருங்கும்பொழுது அதிலுள்ள நரம்புகள் அமுக்கப்படுவதினுல், தாய்க்கு இடுப்பில் வலி யுண்டாகிறது. கருப்பையில் சிசுவைப் போர்த்தியிருக்கும் ஜவ்வும், சிசுவுக்கு உணவளிக்கும் நஞ்சும், தாயின் கருப்பையில் ஒட்டிக்கொண்டிருக்கின்றனவென்று சொல்லலாம். பிரசவகாலத்தில் இவை இரண்டும் கருப்பையைவிட்டுப் பிரிந்து வெளிப்படுகின்றன.

சிசு வெளிப்படும்போது கருப்பை வாய் திறப்பதினுலும், கருப்பையுடன் ஒட்டி யிருந்த நஞ்சும், ஜவ்வும் பிரிவதினுலும், பல சிறு இரத்தக் குழாய்கள் உடைந்து, உதிரம் வெளிப்படுகின்றது. அல்லாமலும், கருப்பைக்குள் பெரிய காயமும், கருப்பையின் வாயிலிலும் வெளியிலும் சிறு புண்களும் வெடிப்புகளும், உண்டாகின்றன.

சாதாரணமாக நம் உடம்பில் எங்கேயாகிலும் காயம்பட்டால், அதைச் சுத்தமாய் வைக்காவிடில், சீழ்பிடித்து ஒரு சிரங்காய் விடுமென்பது எல்லோரும் அறிந்ததே. தேகத்திற்கு வெளியிலிருக்கும் காயத்தின்மேல் காற்றும் வெளிச்சமும் படுவதனுல், அவ்விரணத்தினுல் அவ்வளவு ஆபத்திற்கு இடமாகிறதில்லை. கண்ணுக்குத் தெரியாத இடத்தில், அதாவது கருப்பையில் உள்ள பெரிய காயத்தில் அழுக்குச்சேர்ந்தால், எவ்வளவு கெடுதலாகுமென்பதை நீங்களே ஆலோசித்துப் பாருங்கள்!

முதலில் சீழ் உண்டாவதற்குக் காரணம்

காற்றுள்ள இடமெல்லாம் கண்ணுக்குப் புலப்படாததும் பெருக்க (பூதக்) கண்ணுடியின் உதவியைக் கொண்டு காணக் கூடியதுமான சிறு புழுக்கள், ஏராளமாய்க் குடிகொண்டிருக்கின்றன. நம் உடம்பின் மீதும், எல்லாப் பொருள்களின் மீதும், இவை எப்போதும் இருக்கும் தன்மையுள்ளன. அழுக்கும் ஜனக்கூட்டமுமுள்ள விடத்தில், இன்னும் மிகுதியாகவே யிருக்கின்றன. இந்தப் பூச்சிகளை அழிப்பவை நெருப்பு, வெயிலின் உஷ்ணம், வீரம், பூரம், துருசுபோன்ற சில பாஷாண மருந்துகள் ஆகியவைகளே; டிங்ச்சர் அயோடின், கார்பாலிக் திராவகம் முதலியன மேலுபயோகத்திற் சேர்ந்தவை. ஆகையால் நீங்கள், யாராவது, ஆஸ்பத்திரியிலாவது அல்லது உங்கள் வீட்டிலாவது, ஓர் அறுவை இரண மருத்துவம் (ஆப்பரேஷன்) செய்வதைப் பார்த்திருந்தால், பின்வருமாறு நடப்பதைக் கவனித்திருப்பீர்கள்:—வைத்தியர்கள் ஆயுதங்களையெல்லாம் கொதிக்

கவைத்து, கைகளை பிரஷ், சோப்பு, வெந்நீர்களால் நன்றாய்க் கால் மணி நேரம் தேய்த்துக் கழுவி, பிறகு ஒரு பீங்கான் லோஷனில் கையை ஐந்து நிமிஷம் நனைத்து வைத்திருந்து, அதன் பிறகே அறுவை (ஆப்பரேஷன்) செய்வார்கள். கை சுத்தியானநின்பின் ஆப்பரேஷன்முடியுமட்டும், வேறொன்றையும் தொடமாட்டார்கள். ஆப்பரேஷன் செய்யும் பாகத்தைக்கூட நன்றாய்க் கழுவிச் சுத்தி செய்வார்கள். அல்லது டிங்ச்சர் அயோடின் போட்டுத் தேய்த்த பிறகுதான், அறுவையை (ஆப்பரேஷனைத்) தொடங்குவார்கள். அறுவையாலுண்டாகும் ரணத்திற்கு, லோஷனில் நனைத்த துணி, பஞ்சு, இவைகளை மேல் போட்டுக் காற்றுப்புகா வண்ணம் மூடி விடுவார்கள். இவ்வளவு பத்திரமாய்ச் செய்தால்தான், புண் சீழ்பிடிக்காமல், நோயாளிக்கு காய்ச்சல் (ஜுரம்) வாரமல், புண்முழுவதும் ஆறும். இதில் கொஞ்சமேனுந் தவறுத லிருந்தால், நோயாளிக்குக் கஷ்டம் ஏற்படும்.

பிரசவ காலத்தில், இயற்கையாகவே கருப்பையிலும் அதற்கு வெளியிலும் அநேக காயங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. இந்தக் காயங்களில், கண்ணுக்குத்தெரியாத சிற்றணுக் "கிருமிகள்" அல்லது சிறு புழுக்கள் சேர்ந்து சீழ்பிடித்துக் கெட்டமணத்தை யுண்டுபண்ணி, தாயின் நோய்க்குக் காரணமாகிறது.

பண்டைக்கால முறைகளை யனுசரிக்கும் நம்மவர்கள் வீட்டில் ஒரு பிரசவம் எப்படி நடத்தப்படுகிறதென்பதைக் கவனிப்போம்.

(1) பிரசவ காலத்தை, ஒரு தீண்டாக்காலமாகப் பாவிப்பதினால், கர்ப்பிணிக்கு இடுப்புநோய் கண்டவுடன், காற்று, வெளிச்சம் இல்லாத ஓர் இருண்ட சிறு அறையில் அவளைப் படுக்க வைத்து; உடனே பரம்பரை மருத்துவச்சிக்கு ஆள் அனுப்புவார்கள்.

(2) பத்துமாதமாகச் சேர்த்து வைத்திருந்த அழுக்குக் கந்தல்களையும், கிழிந்த துணிகளையும் அந்தச் சமயம் உபயோகிப்பதற்குக் கொடுப்பார்கள்.

(3) ஓர் அழுக்குத் தலையணையும் கிழிந்த பாயுந்தான் தாய்க்குப் படுக்கை.

(4) ஒரு மூலையில் சாம்பல் நிறையக் குவித்திருக்கும். அது தான் உதிரந்துடைக்கும் பஞ்சும்; தாயார் உட்காரும் ஆசனமுமாம்.

(5) ஒரு கொட்டாங்கச்சி நிறைந்த விளக்கெண்ணெய் தான், மருத்துவச்சிக்கு சோப்பும் தண்ணீருமாம்.

(6) பிரசவ அறையில், பகலில்கூட வெளிச்சம் இல்லாத தனுல், ஒரு குத்து விளக்கு, அல்லது அகல் மண்விளக்குத் தீபம் இராப்பகல் எரிந்துகொண்டே யிருக்கும்.

(7) பழைய முறத்தில் சாம்பலும், மண்சட்டியுந்தான் பிரசவித்த தாய்க்கு பெட்பான், அல்லது சல, மலம், கழிக்கும் ஏனம்.

(8) சில வீடுகளில், ஒரு புட்டி சாராயம் அல்லது பிராந்தியும் தயாரா யிருக்கும்.

நமது ஜனங்கள் எவ்வளவு பணக்காரர்களா யிருந்தாலும், மேற்சொன்ன சாமான்களைத் தவிர்த்து, வேறொன்றும் பிரசவ அறையில் காணமுடியாது.

(1) மேர்சொன்ன அறையில் லட்சக்கணக்கான கிருமிகள் குடிகொண்டிருக்கும். சூரிய வெளிச்சமும், சுத்தக் காற்றும் கிருமிகளின் சத்துருக்கள். நம்மவர்கள், வெளிச்சமுங் காற்றும் உதவாவென்று, ஜன்னல்களையுங் கதவுகளையும் நன்றாய் அமுக்கிச் சாத்திவிடுவார்கள். ஏனென்றால், அவர்களுக்குக் காய்ச்சலுக்குக் காரணம் இன்னதென்று தெரியாதாகையால், பிரசவ பெண்ணின் தேகத்தில் காற்றுபட்டால், குளிர் காய்ச்சல் வந்து விடுமென்று எண்ணி, கதவு, சன்னல்களில் ஒரு சிறு துவாரங்கூட இல்லாமல் அடைத்து விடுவார்கள்.

இயற்கையில் வாழும் மற்றப் பிராணிகளைக் கவனித்துப் பாருங்கள்: பிரசவ காலத்தில் காற்று வெளிச்சம் படுவதினுல் என்ன கெடுதல் அவைகளுக்கு நேரிடுகிறது? அதனுல்தான் மற்றப் பிராணிகள் மனிதர்களைப்போல் நோயினுல் பீடிக்கப்படாமல், தேக சுகத்துடனும் சுயேச்சையுடனும் திரிகின்றன. உற்று நோக்குமிடத்து, நாமும் ஒரு பிராணிதானே? நூதன வைத்திய சாஸ்திரிகள், சூரிய வெளிச்சத்தினுல் அநேக வியாதிகள் குணப்படுவதைக்கண்டு பிடித்திருக்கிருர்கள். நமக்குக் கடவுள் அப்படிப்பட்ட சூரிய வெளிச்சத்தை ஏராளமாக அளித்திருக்கிருர். நாம் அதை யேன் அசட்டை செய்யவேண்டும்? இதனுல் எப்போதும் வெயிலில் திரியவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நாம் வாசஞ்செய்யும் வீடுகளில் வெளிச்சமும் நல்ல காற்றும் மிகுதியாக பரவவேண்டுமென்றே சொல்லுகிறேன்.

(2-3) இரண்டாவது, அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் பழைய துணிகளிலும் கந்தல்களிலும் மாதக்கணக்காய்ச் சேர்ந்த அழுக்கும் எண்ணெய்யும் மிகுந்திருப்பதால், அதில் குடிகொண்டிருக்கும் கிருமிகளுக்குக் கணக்கில்லை. படுக்கையும் அப்படியே.

(4-7) சாம்பல் குவியலைச் சிறிது கவனிப்போம்: தோட்டத்துக் குப்பைக் குவியலிலிருந்து கொண்டுவந்த சாம்பலா யிருக்குமானால் கிருமிகளுக்கு கேட்பானேன் ?

குப்பைகளிலுள்ள "ரண இசிவு" அல்லது இங்கிலீஷில் 'Tetanus' என்று சொல்லும் கிருமிகள் நோயை யுண்டாக்கும். இது கருப்பையிலுள்ள புண்ணிலாவது, அல்லது வெளியி லேற்பட்ட காயங்களிலாவது கலந்துவிட்டால், பிரசவமாகி இரண்டு மூன்று நாட்களில் அந்நோயினால் தாய் பற்றப்பட்டு மாண்டுவிடுகிறாள். எல்லாவிதமான நோய்களுக்கும் கிருமிகளே காரணம். உதாரணமாக:—(Typhoid) டைபாயிட், (Cholera) வாந்திபேதி, (Tuberculosis) காசம், (Dysentery) சீதக்கடுப்பு, (Leprosy) குட்டம் முதலியன. இதேமாதிரி, (Sepsis) ஜன்னி சுரத்திற்கும் கிருமிகளே காரணமாகின்றன.

பிரசவகாலத்தில், கருப்பையிலும், அதன் வெளிப்பக்கத்திலுள்ள பெண்குறியிலும், அநேக வெடிப்புக் காயங்கள் ஏற்படுகின்றனவென்று சொன்னோம். மருத்துவிச்சி, தன் கைகளைச் சுத்தி செய்யாமல், தன் விரல்களினால் பரீட்சை செய்யும்பொழுது, அவள் கையிலுள்ள ஆயிரக் கணக்கான விஷப் புழுக்கள், கர்ப்பவாயிலும் குறியிலுள்ள காயங்களிலும் சேர்ந்துவிடும். காயம், உதிரம், தேக உஷ்ணம், இருட்டு இவையெல்லாம் புழுக்கள் பெருக வசதியாகத் தாயின் தேகத்தில் அமைந்திருக்கின்றன. இருபத்து நான்கு அல்லது நாற்பத்தெட்டு மணிநேரத்தில், காயத்தில் கலந்த கிருமிகள், கோடிக் கணக்காகப்பெருகித் தாய்க்குக் காய்ச்சலை யுண்டுபண்ணுகின்றன. [புழுக்கள் அபரிமிதமாகவும் தாயின் உடல் வலிமை குறைவாகவுமிருந்தால் இரத்தக் குழாய்களில் புகுந்து உடல் முழுதும் பரவித் தாய்க்குக் கொடிய நோயை விளைவிக்கின்றன. இதுவே ஜன்னி சுரம்; இதற்குத் தப்பிப் பிழைக்கும் பெண், மறு பிறப்பு எடுத்ததாகச் சொல்லலாம். இதன் பெயர் இங்கிலீஷில் "Septicaemia"]

கிருமிகள் குறைவாகவும் தேகவலிமை அதிகமாகவுமிருந்தால், புழுக்கள் சேர்ந்தவிடத்திலேயே நிலைகொண்டு, உதிரத்தில் துர்க்கந்தத்தை மட்டும் விளைவிக்கும்; சீக்கிரத்தில் தகுந்த வைத்தியஞ் செய்தால், கிருமிகள் நசித்து, தாயானவள் உடல் நலத்தை யடைவாள். இதற்கு "Sapraemia" என்று சொல்வது.

(அ) மருத்துவப் பெண்ணின் விரல்களினால் மட்டுமல்லாமல், பெண்குறியின்மீதுபடும் அழுக்குத் தண்ணீர், துணி, பஞ்சு இவைகளின் காரணத்தினாலும் இந்தக் காய்ச்சல் உண்டாகலாம்.

(ஆ) இதுவுமல்லாமல், மல வாயிலும் பெண்குறியும் அருகி லிருப்பதால், தாய் மலம் பிரியும்போது, கூடிய மட்டில் செம் மையாய் அந்தப் பாகத்தைச் சுத்தி செய்துகொள்ளவேண்டியது.

(இ) பெண்குறியில், சிரங்கு, சீழ், கிரந்தி, வெட்டை, இந் நோய்களிருந்தால், தாய்க்குப் பிரசவ அறையில் சுரம் உண்டா கும். ஆகையால் இந் நோய்களைப் பிரசவத்திற்கு முன்னரே கவ னிக்கவேண்டியது. மேலே சொன்ன பழக்க வழக்கங்களைக் கவனிக்கும்போது, பிரசவ காலத்தில் காணும் காய்ச்சலுக்கு எவ் வளவோ காரணங்கள் ஏற்படுகின்றன.

அனுபவத்தில் பெரும்பாலும் மருத்துவப் பெண்களின் கையாடல்களினால்தான் தாய்க்குத் தீங்கு விளைகிறது. கை வைக்கா சுகப்பிரசவங்களில் ஒன்றும் கெடுதி நேரிடுகிற தில்லை. நல்ல பயிற்சி இல்லாத மருத்துவப் பெண்களின் நகக் கண்களி லும், தேகம், வஸ்திரம், இவைகளிலும், கோடிக்கணக்கான விஷக்கிருமிகள் வாசஞ்செய்யும்.

முக்கியமாய்த் தலைப்பிள்ளை பெறும் பெண் அதிக நேரம் வேதனைப் படுவதாலும், எல்லாக் கஷ்டங்களும் முதல் குழந்தை பெறும் பெண்களுக்கு ஏற்படுவதாலும், அடிக்கடி மருத்துவச்சி தாய்மார்களின் பிறப்புறுப்பில் கையாடும்படி நேரிடுகிறது. ஆகை யால் இக்கொடிய நோய், முதல் குழந்தை பெறுகிறவர்களையே பீடிக்குந் தன்மையுள்ளது. பிரசவம் சுலபமாக நேர்ந்துவிட்டால் பரம்பரை மருத்துவச்சிகள் கையாட அவசிய மில்லாமல், அந்தப் பெண்கள் இந்த சுரத்திற்குத் தப்புகிறார்கள்.

பேசுமிடத்து, கரு உயிர்ப்பவர் பலருக்கு ஒருவர் உதவியும் வேண்டியதில்லை. இயற்கையில் கஷ்டம் ஏற்படுவது மிகக் குறைவு. நூற்றுக்கொரு பிரசவத்தில் தான் கஷ்டம் ஏற்படும் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. மருத்துவம் நன்றாகக் கற்றறிந்த வைத்தியர்களைக் கொண்டு அப்படிப்பட்ட கஷ்டத்தை நிவர்த்திசெய்து கொள்ளலாமே தவிர, ஒன்றும் தெரியாத மருத் துவப் பெண்கள் கையாடுவதால் என்ன பயன்? இவர்கள் தாய்க் குக் கேடுவிளைவிக்கக் காரணமா யிருக்கிறார்கள். இவர்கள் மட்டு மல்ல; மருத்துவப் பரீட்சையில் தேர்ந்த பெண்கள்கூட, வேலை சரிவரத் தெரியாததனாலோ, அல்லது சோம்பலாலோ, சுத்தி, பக்தியாய் வேலைசெய்யாமல், பேதைமையான ஜனங்களிடத்தில் ராங்கி பாராட்டி, பிரசவ பெண்ணுக்குக் கஷ்டத்தை விளைவிக்கிறார் கள். நம் பெண்கள், எதுசரி, எது பிழை என்று, அவர்கள் செய் கையில் குற்றத்தைக் கண்டுபிடிக்கத் தெரியாததினால், மதிமயங்கி நிற்கும்படியாக விருக்கிறது.

இந்தக் கொடிய சுரநோயைத் தடுக்கும் முறைகள்.

பிரசவ காலத்திற்கு முந்தியே, பிரசவ சமயத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஆயத்தப்படுத்த வேண்டியது. நம் நாட்டில் பாரம்பரையாகப் பயின்றுவரும் வழக்க மென்ன வென்றால், இடுப்பு நோய் ஆரம்பித்தவுடனே, தங்கள் வீட்டு மருத்துவச்சியை அழைத்து வருவது. அவள் சுகாதார முறைகளை யறியாதவளாகவும், மருத்துவ சாஸ்திரம் தெரியாதவளாகவு மிருப்பதால், முக்கியமாக, இந்த ஜன்னி சுரத்திற்கு அவளே காரணமாகிறாள். சுத்தமில்லாத உடையையும், அழுக்கடைந்த உடம்பையும் கண்ணுக்குத் தெரியாத கோடிக் கணக்கான கொடிய விஷக்கிருமிகள் வாசஞ்செய்கின்ற நீண்ட நகக்கண்களையு முடையவளா யிருக்கிறாள். இம்மருத்துவச்சி தாயானவள் இடுப்புநோயால் வருந்தும் போது, தன் அசுத்தமான விரல்களை விளக்கெண்ணெயில் தோய்த்துக் கருப்பையின் வாயில் தடவிப்பார்ப்பாள். அப்பொழுதே அவள் விரலின் நகத்திலுள்ள அழுக்கும் லட்சக்கணக்கான கிருமிகளும் தாயின் இரத்தக் குழாய்களில் சேர்ந்து விடுகின்றன. கஷ்டப் பிரசவங்களில், ஒரு தரமின்றிப் .பலதடவை பரீட்சை செய்து பார்ப்பாள்; அதனால் ஒவ்வொரு தடவையும் லட்சக்கணக்கான விஷப்பூச்சிகளைத் தாயின் கருப்பையில் சேர்த்து விடுவாள்.

ஆனால், நம்மவர்களிற் சிலர், 'எத்தனையோ பிரசவங்கள் தங்கள்வீட்டு மருத்துவச்சியால் நடத்தப்பட்டும், இப்படிப்பட்ட காய்ச்சலினால் பீடிக்கப்படவில்லையே?' என்று, சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம்—சாதாரணமாகச் சுகப்பிரசவங்களில், நம் சகோதரிகள், பிறப்புறுப்பில் (மர்மஸ்தானத்தில்) மருத்துவச்சியால் கையாடப் பட்டவர்களில்கூடச் சிலர், தங்கள் தேகபலத்தினால், இந்த சுரத்திலிருந்து தப்பிக் கொள்ளுகிறார்கள். விஷபேதி, டைபாயிட், பிளேக், இப்படிப்பட்ட வியாதியினால் பீடிக்கப்பட்டவர்களில் எப்படிச் சிலர் தப்பிப் பிழைக்கப் பலர் மாண்டு விடுகிறார்களோ, அப்படியே, இந்த வியாதியிலும் நேரிடுகிறது.

இன்னும் ஒரு காரணம் :—பனிக்குடநீர் வெளிவருகிறதற்கு முன் கருப்பை வாயில் கிருமிகள் சேர்ந்தால் அந்த நீர் வெளிப்படும்போது, அக்கிருமிகளை யுள்ளேபுகாதவண்ணம் வெளியே தள்ளிவிடுகிறது.

(a) மேற் சொன்ன விஷயங்களை மனத்தில் வைத்துக் கொண்டு பிரசவத்தை நடத்த நன்றாகப்பழகித்தேர்ந்த மருத்துவப் பெண்ணைத் தயார் செய்துகொள்ள வேண்டியது.

(b) கரு உயிர்க்க (பிரசவத்திற்குக்) காற்றோட்டமும் வெளிச்சமு முள்ள அறை யொன்றைச் சுத்திசெய்து வைக்கவேண்டி

யது. அந்த அறையில், பிரசவத்திற்கு ஒருபெஞ்சிப் பலகையும் ஒரு மேஜையும், ஒரு நாற்காலியும், தாயாரின் துணிகளை வைத்துக் கொள்ள ஒரு டிராங்க் பெட்டி அல்லது அலமாரியுமே அவசியம். அனாவசியமான சாமான்களை அந்த அறையில் போட்டு அடைத்து வைக்கக்கூடாது. சுவரிலுள்ள படங்களை யெடுத்துவிட்டுத் தூசி ஒட்டடை முதலியவற்றைத் துடைத்துச் சுத்தி செய்ய வேண்டும்.

(c) தாயின் துணிகளை (உடைகளை) யெல்லாம் சோப்புத் தண்ணீரில் ஊறவைத்து, வெயிலில் உலர்த்தி மடித்துப் பெட்டியில் வைத்துக்கொள்ள வேண்டியது. தாய்க்கும் சிசுவுக்கும் இரண்டு கம்பளிகள் அவசியம். சில வெள்ளைத் துண்டுகளும், சில வெள்ளைத் துணிகளும், சிசுவுக்குத் தேவையா யிருக்கும். தாயின் படுக்கை, தலையணை, திண்டுகளை வெயிலில் உலர்த்தி, வெள்ளை உறையிட்டு, உபயோகிக்க வேண்டியது.

(d) உதிரம் வாங்கும் துணி ("Sanitary Towels") வாங்கி வைத்திருக்கவேண்டும் அல்லது அதற்குப் பதிலாக, கிழிந்த வெள்ளைத் துணிகளைச் சோப்புத் தண்ணீரில் கழுவி, வெயிலில் கொடியில் உலர்த்தி, கைகளைச் சுத்தஞ்செய்துகொண்டு மடித்து பெட்டியில் வைத்துக்கொள்ள வேண்டியது. ஆவியில் சுத்தஞ் செய்து உலர்ந்த பஞ்சு (Sterilized cotton) ஒரு பவுண்டு கைவசமிருத்தல்வேண்டும். சுத்தமான பஞ்சை பெண்குறியில் வைத்து, வெள்ளைத் துணியை அதன்மேலே போட்டு, உதிரம் படுவதற்குக் கட்டிவிடலாம்.

(e) படுக்கை அழுக்காகாதபடி படுக்கையின்மேல் இரண்டு கஜம் (Oil cloth) எண்ணெய்த்துணி விரிப்பது நலம்.

(f) கைகளை சுத்தஞ்செய்ய ஒரு பிரஷும் (Nail brush) இரண்டு கட்டி (Sunlight soap) சோப்பும் வைத்திருத்தல் வேண்டும்.

(g) வாயகன்ற பித்தளைச் சருவங்களாவது, அல்லது பேஸினாவது, இரண்டு மூன்று தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டியது.

(h) கைதுடைக்க வெள்ளைத் துணிகள் இரண்டாவது வேண்டும்.

(i) (Lysol) லைஸால் நாலு அவுன்ஸ் குப்பி ஒன்று வாங்கி, வைக்கவேண்டியது. இது கிருமிகளைப் போக்கும் சக்தியுடையது இதை நல்ல தண்ணீரில் [ஒரு பைண்ட் (இருபது அவுன்ஸ்) ஒரு டீஸ்பூன் (One tea-spoonful) விதம்] கலந்து

பிரசவ சமயத்தில் ஒரு ஏனத்தில் தயாராக வைத்துக்கொள்ள வேண்டியது. பிரசவ சமயத்திற்கு வேண்டிய மற்ற மருந்துகளும், சாமான்களும், பிரசவத்தை நடத்தும் மருத்துவப் பெண் தயார்செய்ய வேண்டியது.

மேற்சொன்ன ஏற்பாடுகள் செய்வதற்குத் தம் வீட்டில் வசதி இல்லாமலிருந்தால், ஏழைகள், தம் வீட்டிலிருந்து தாயும் குழந்தையும் கஷ்டப்பட்டு உயிரிழப்பதைவிட, அருகிலிருக்கும் பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போய், பிரஸவத்தை நடத்திக்கொள்வது மிக நல்லது. பிரசவ ஆஸ்பத்திரிகளில், அரசாங்கத்தார் மிகுதியானபொருளைச் செலவிட்டு, பிரசவத்திற்குத் தற்கால முறைப்படி சாமான்களோ, மருந்தோ, பிரசவத்தைநடத்தும் டாக்டரோ, நர்ஸ்களோ, பிரசவ அறையோ, ஆகிய எல்லா விஷயங்களிலும் குறைவுபடாமல், எந்தச் சமயத்தில் எது அவசியமோ அவ்வளவும் தயாராக வைத்திருக்கிறார்கள். ஏழைகளுக்குப் பணச்செலவில்லை. எவ்விதக் கவலையுமில்லாமல் கரு உயிர்த்து, பிள்ளைபெற்ற பிறகு சிசுவும் தாயும் வீட்டிற்குச் சுகமாகத் திரும்பிவரலாம். ஆனால், சாதாரணமாக நம் ஜனங்களுக்கு ஆஸ்பத்திரியென்றால் மனதில் ஓர் திகிலுண்டாகி விடுகிறது. ஏனென்றால், நம்மவர்களில் பலர் எந்த வியாதியும் மிகுதியான பிறகுதான், நோயாளியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோவது வழக்கம். அதைப் போலவே, பிரசவத்தில்கூட, கூடியமட்டும் வீட்டில் வழக்கமாய் பார்ப்பவர்கள் பார்த்த பிறகுதான், பிரசவ வேதனைப்படும் பெண்ணை ஆஸ்பத்திரிக்கு வண்டியில் போட்டுக்கொண்டு போவது வழக்கம். இப்படிப்பட்ட துன்பமான நிலையில் மரணம் நேர்ந்தால், ஜனங்களின் அறியாமை காரணமாகுமே தவிர, ஆஸ்பத்திரி காரணமாகாது.

மருத்துவநூலில் பயின்ற தாதி (நர்ஸ்)களை நியமிக்கும்போது தங்களுக்குத்தெரிந்த டாக்டர்களின் யோசனையைக்கேட்டு நியமித்துக் கொள்ளவேண்டியது.

பிரசவவேதனை ஆரம்பித்தவுடன் செய்யவேண்டிய முறைகள்

முன்னமே நியமித்து வைத்திருக்கும் நர்ஸுக்காவது, டாக்டருக்காவது சொல்லி யனுப்பவேண்டியது. அவர்கள் வரத் தாமதப்பட்டு இடுப்புநோய் பலப்பட்டால், வீட்டிலுள்ள பெண்களுக்கு (Enema) "எனிமா" கொடுக்கத் தெரியுமானால் தாயின் மலச்சிக்கலைப் போக்குவதற்கு, ஓர் எனிமா கொடுக்கலாம். மலங்கழிந்தவுடன், மலவாயிலை நன்றாய்ச் சுத்திசெய்து, தாயின் குறியிலுள்ள மயிரைநீக்கிச் சுத்தஞ்செய்து, சோப்பு வெந்நீரால் தேய்த்துக் கழுவிக்கொள்ள வேண்டியது. நேரமிருந்தால், இளவெந்நீரில் உடம்பு குளிப்பது நலம். சுத்த உடை உடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். மற்ற விஷயங்களை நியமிக்கப்

பட்டிருக்கும் நர்ஸூம், டாக்டரும் கவனிப்பார்கள். சில சமயங்களில், டாக்டர், நர்ஸ் வருவதற்கு முன்னே பனிக்குட நீர் வெளி வந்து, குழந்தைகூடப் பிறந்துவிடலாம். அந்தச் சமயங்களில், வீட்டிலுள்ள பெண்கள் பயப்படாமல் பின்வருமாறு செய்ய வேண்டியது:—

(i) பிரசவத்திற்கென்று தயார்செய்த அறையில், ஒரு விசுப் பலகை (பெஞ்சின்) மேல் வெள்ளைத்துணியை விரித்து, தாயை மல்லாந்து படுக்கச்செய்யவேண்டியது.

(ii) வீட்டிலுள்ள பெண்களில் ஒருவர், தன் கைகளை நன்ருய்ச் சோப்பு வெந்நீரால் தேய்த்துக் கழுவிக்கொண்டு, தாய்க்குப் பக்கத்தில், குறியைப் பார்த்துக்கொண்டு, குழந்தையின் வரவை எதிர்பார்த்து நின்றுகொண் டிருக்கவேண்டியது. இந்தப் பெண்ணின் கையில் சீழ், கட்டி, சிரங்கு, விரல்சுத்தி முதலிய நோய்கள் இருக்கவே கூடாது. கையிலுள்ள நகங்களைக் கத்தரித்துவிடவேண்டும். நேரமிருந்தால், பிரஷைத் தண்ணீரில் கொதிக்கவைத்து, அதைக்கொண்டு கைகளை நன்ருய்ச் சோப்பு வெந்நீரால் ஐந்து நிமிஷமாகிலும் தேய்த்துக் கழுவி, ஐந்து நிமிஷம் லைசால் (Lysol) என்னும் லோஷனில் நனைத்து வைத்தபின் பிறகுதான் தாயின் குறியை இவர்கள் கையினுல் தொடவேண்டும். கைகளைச் சுத்தஞ்செய்தபின் குழந்தையை வாங்கும் வரையில், ஒரு பொருளையும் தொடக்கூடாது. ஏனென்ருல், அதிலிருக்கும் கிருமிகள் கையில் ஒட்டிக்கொள்ளும். தாயின் குறியையும் சோப்பு வெந்நீரால் நன்ருய் அழுக்கில்லாமல் தேய்த்துக் கழுவினபின், லைசால் கலந்த தண்ணீராலும் கழுவவேண்டியது.

குழந்தையின் தலை வெளிவந்தவுடன், உதவிபுரியும் பெண் தன் சுத்தமான கைகளினுல் தலையைத் தாங்கிக்கொள்ள வேண்டியது. கழுத்தில் கொடியிருந்தால், தலை வழியாக மெதுவாகக் கழற்றிவிடலாம். அதன்பின், தோட்பட்டை வெளிவந்தவுடன், குழந்தையின் இரண்டு அக்குளிலும் கையைக்கொடுத்து, குழந்தை கீழே நழுவி விழாதபடி எடுத்துவிடலாம். குழந்தையை ஈரத்தில் கிடத்தாமல், ஓர்சுத்தமான காய்ந்த துணியில் படுக்கவைக்கவேண்டியது. தாய்க்கு நஞ்சு வெளியில் வரும் சமயத்தில் நூல்கயிற்ருல் (கால்மணிநேரம் கொதிக்கவைத்த நூல்) குழந்தையின் தொப்புள் கொடியைக் கட்டவேண்டியது. குழந்தையின் தொப்புளுக்கு இரண்டு அங்குல தூரத்தில் முடிபோட்டு, கொதிக்கவைத்த கத்தரியால் கத்தரிக்கவேண்டியது. நஞ்சு வெளிவந்த பிறகு தாயின் குறியை கொதிக்கவைத்த சுத்தத் தண்ணீரால் நன்ருய்க் கழுவி, சுத்தமான பஞ்சைவைத்து, மேலே சொன்னபடி தயார் செய்த வெள்ளைத் துணியால் கட்டிவிட வேண்டியது. எந்தக்கார

ணத்திஞலாவது வீட்டிலுள்ள பெண்களும் மருத்துவப் பயிற்சி யில்லாதவர்களும் தாயின் குறியினுள் கையைவிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமே யில்லே. அவர்கள் பார்ப்பதனுல் யாதொரு பயனுமில்லே. இயற்கையில் மற்றப் பிராணிகள் கரு உயிர்ப்பதைப் பார்த்தாகிலும் மனிதப் பிராணியாகிய நாம் கற்றுக்கொள்ளக் கூடாதா ?

நூற்றில் ஒரு பிரசவத்தில்தான், கஷ்டம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறேன். அப்படி யேற்படும்போது, மருத்துவப் பயிற்சியுள்ளவர்களிஞல் அக்கஷ்டத்தை நிவர்த்திக்க முடியுமே யொழிய, மற்றவர்களிஞல் முடியாது. அப்படியிருக்க, நம்மவர் கள் வீணே மருத்துவப்பயிற்சி யில்லாதவர்களேக் கையாட விட்டு, நூற்றுக்கு முப்பது பிரசவ பெண்களேக் கொன்றுவிடுகிறுர் கள். இஃதென்ன மூடத்தனம்! பகுத்தறிவில்லாத பிராணி களுக்குத் தெரிந்த விஷயங்கூட நமக்குத் தெரியவில்லேயே !

இஃதிப்படியிருக்க, நான் மேலே சொன்ன பிரசவ பரிகாரம் ஏதோ சில வேளேகளில், நர்ஸாவது, டாக்டராவது வரத் தடைப் பட்டால், சாதாரணமான ஜனங்கள், ஓர் அவசர சமயத்தில் செய்யலாமே தவிர, அவர்களுக்குப் பதிலாகத் தாங்களே எப் பொழுதும் செய்துகொள்ளலா மென்று நினேக்கக்கூடாது. ஏனென்றுல், எதிர்பாராத கஷ்டங்கள் எவ்வளவோ பிரசவத்தில் ஏற்படலாம். அதற்கெல்லாம், மருத்துவத்தில் பயிற்சியில்லாத வர்கள் எவ்வளவு புத்திசாலிகளா யிருந்தபோதிலும், பரிகாரம் செய்யமுடியாது. கற்றறிவில்லாத சகோதரிகளில் சிலர், அறி வீனத்திஞல் தாய்க்குத் தீங்கை விளேவிக்கும், சில தீய பழக்கங் களேக் கையாடி வருகிறுர்கள். அவற்றில் சிலவற்றை இங்கு விவ ரிப்பது அவசியம்.

மூடவழக்கம்—பிரசவித்த பெண்கள் சில நாள் வரையில் தண் ணீர் அருந்தக் கூடாதென்றும், அருந்தும் தண்ணீர் சீழாய் மாறிக் கருப்பையில் சீழ் பிடித்து, ஜன்னியை யுண்டுபண்ணும் என்றும் தப்பெண்ணங்கொண்டு, தாயை இந்தக் கொடுமைக்கு உட்படுத்துகிறுர்கள். இரவும் பகலும் பிரசவ வேதனேயால் வருந்தி இளேத்து, உதிரமும் நீரும் வியர்வையும் தேகத்தை விட்டுப் பிரிந் ததிஞல் களேத்திருக்கும் தாய்க்கு மிகுதியான தாகமிருக்கக் கூடு மென்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். கோடை காலத்தில் தாகத்தின் கொடுமை இன்னும் பதின் மடங்கு அதிகம். அப்படிப் பட்ட சமயத்தில், கடுந்தாகத்திற்குத் தண்ணீரை மறுத்தால், அந்தப் பெண்ணின் நிலே என்னென்று சொல்லலாம்! பிரசவிக்கும் போது இயற்கையாகக் கஷ்டப்பட்ட பெண்ணுக்கு, மனிதரின் முட்டாள் தனத்தின் செயற்கையாலும் கஷ்டம் ஏற்படுகிறது.

எல்லா காய்ச்சல்களுக்கும், எல்லா நோய்களுக்கும் தண்ணீர் முக்கியமான உணவும் மருந்துமாகும். சரீர சாஸ்திரத்தின்படி, நாம் அருந்தும் தண்ணீர், நம் உடலுக்குள்ளேயிருக்கும் அசுத்தங்களை யெல்லாம் கழுவி மூத்திரமாகவும், வியர்வையாகவும் வெளிப்படுகிறது. இப்படி உடல் சுத்தியை யுண்டுபண்ணும் தன்மையுள்ளதும், பிராணுதார மானதுமான தண்ணீரை மறுத்தால், பல துன்பங்களுண்டாகும்.

இரண்டாவது—பிரசவித்த பெண்ணுக்கு மூன்று நாள்வரை உணவு கொடுக்கலாகாதென்று பட்டினி போடுகிறார்கள். பிரசவத்தினால் இளைத்துக் களைத்திருக்கும்பொழுது, தாகத்திற்குத் தண்ணீரும் பசிக்கு ஆகாரமும் மறுப்பது, என்ன அறியாத்தனம்! பயிற்சியில்லாத மருத்துவப் பெண்ணின் விரலிலும் நகக்கண்களிலுமுள்ள விஷக் கிருமிகளே ஜன்னி சுரத்திற்குக் காரணம் யென்பதை யறியாததால், தண்ணீர் அருந்துவதினாலும், ஆகாரம் சாப்பிடுவதினாலும், நல்ல காற்றைச் சுவாசிப்பதாலும், குளிர் சுரம் வந்துவிடுமென்று எண்ணி, பிரசவித்த தாயை மேற்சொன்ன கஷ்டங்களுக்கு உட்படுத்துகிறார்கள்.

தண்ணீரும், உணவும் தாய்க்குக் கொடுக்காததனால், உடல் பலவீனப்பட்டு, ஏதாவது கிருமிகள் மருத்துவிச்சியின் கவனக்குறைவினால் குறியிலுள்ள புண்ணிலாவது கருப்பையிலாவது நுழைந்திருந்தால் அவை பெருகி, தாய்க்கு நோயை யுண்டுபண்ணும். மேல் நாட்டார் இப்படிப்பட்ட அநாகரிகப் பழக்கங்களை விட்டுச் சுகாதார முறைகளை அனுசரிப்பதினால்தான், அவர்களுள் பிரசவித்த பெண்களின் மாணத்தொகை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது.

ஆகையால், பிரசவமானவுடனே, தாய்க்குக் களைப்பு தணிய ஒரு குவளை பாலாவது, சூப்பாவது, அல்லது தண்ணீராவது கொடுக்கலாம். பிரசவித்து ஐந்து நாள் மட்டும், பசிக்கும்போதெல்லாம், கஞ்சி, பால், சூப்பு, இவைகளைத் தாராளமாகக் கொடுக்கலாம். தாகத்திற்கு வேண்டிய தண்ணீரைத் தாய் கேட்கும் போதெல்லாம் பயமில்லாமல் கொடுக்கலாம. நம் வீட்டில் வயதில் முதிர்ந்த கிழவிகள் பலர் மருத்துவத்தில் தேர்ந்த டாக்டர் சொல்லைக்கூடப் பாராட்டாமல், தாங்கள் அறிவில்லாமல் அனுசரித்துவந்த பழக்க வழக்கங்களே சரியெனத்தப்பெண்ணங்கொண்டிருப்பதினால், டாக்டர்களைக்கொண்டு பிரசவத்தை நடத்தினாலுங்கூட, ஆகார முறைகளில் அவர்கள் சொல்வதைக் கேட்பதில்லை. டாக்டருக்கு முன் ஒன்றுசெய்வது, அவர்களுக்குப் பின்னால் தமது விருப்பப்படி நடக்கின்றார்கள். பெண்கல்வி பெருகப் பெருகத்தான் இத்தீய பழக்கங்களெல்லாம் நம்மைவிட்டு அக

னர்; கல்வி இல்லாதவர்களுக்குச் சுகாதார விஷயங்களைப்பற்றி என்ன போதித்தாலும் மனதில் தைப்பதில்லை.

மூன்றாவது—பிரசவித்தவுடனே, பெருங்காயம், கஸ்தூரி, வெற்றிலை இவைகளையும், மற்ற பச்சிலை பலசரக்கு மருந்துகளையும், அளவில்லாது, விழுது விழுதாய்த் தினந்தோறும் காலை மாலை பிரசவித்த தாயை விழுங்கச் சொல்லுகிறார்கள். காரமான மருந்துகளை வெறும் வயிற்றில் செலுத்துவதால் குடல் பலவீனப்பட்டு, பேதி, சீதக்கடுப்பு இவைகளை யுண்டுபண்ணுகிறது. சுகப் பிரசவமான பெண்ணுக்கு ஒரு மருந்தும் தேவையே யில்லை. அவசிய மிருந்தால் வைத்தியர்களைக் கேட்டு நிதானமாய் மருந்து தாய்க்கு அளிக்கவேண்டுமே யல்லாது, வீட்டார்கள் விருப்பம் போல் உடலுக்குத் தீங்கை விளைவிக்கும்படி மருந்துகளை வரையறை யில்லாமல் கொடுப்பது தவறு. இவ்வாறு கொடுக்கப்படும் மருந்துகளில் பெருங்காயம், வெள்ளுள்ளி முதலியவை பிரசவ பெண்களுக்கு நன்மை விளைப்பனவாயினும், அவற்றின் பக்குவ முறையை யறிந்து, "அதிகமாயுண்டால் அமுதமும் நஞ்சாகும்" என்பதை மறந்துவிடாமல், ஏற்ற அளவு மிதமாகக் கொடுப்பதே தகும். வைத்தியரில்லாத இடத்து, கைகண்ட அநுபவ முள்ளவர்களே இவற்றைக் கையாளுவது பொருந்தும்.

நான்காவது—பிரசவிக்கும் அறை வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ளதாக விருக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறேன். நம்மவர்கள் பிரசவகாலத்தை ஒரு தீண்டாக் காலமாகவே நினைத்துப் பிரசவித்த தாயை அநேக நிபந்தனைகளுக் குள்ளாக்குகிறார்கள். தனவந்தர்கள், பிரசவத்திற்குப் பின் பத்துநாளும் நர்ஸ் நியமித்துத் தாய்க்கு வேண்டிய பக்குவங்களை நடத்தி வருகிறார்கள். நம் நாட்டில் பெரும் பாலோர் ஏழைகளா யிருப்பதினால், பிரசவத்திற்கு மட்டும் நர்ஸ் அல்லது மருத்துவச்சியை ஏற்பாடு செய்கிறார்கள். சில வீடுகளில், தாய் பிரசவித்த அன்றே யெழுந்திருந்து, தன் வேலையையும் சிசுவின் வேலையையும் பார்த்துக்கொள்ளும்படி யிருக்கிறது. இது தாய்க்குக் கெடுதியை விளைவிக்கும்.

தாய் குறைந்தது இரண்டு வாரம்வரை ஒரு வேலையும் செய்யக்கூடாது. தாயின் தூக்கத்துக்கு ஓர் இடையூறும் ஏற்படக் கூடாது. முக்கால்வாசி நேரம் தாய் படுத்துக்கொண்டே யிருக்க வேண்டியது. நர்ஸ் நியமிக்கச் சக்தியில்லாவிடினும் வீட்டிலுள்ள பெண்களில் சுகாதார முறைகளை யறியக்கூடிய ஒருவர், எப்பொழுதும் பிரசவ அறையி லிருந்து, தாய்க்கும் குழந்தைக்கும் வேண்டிய உதவிகளை அன்புடனும் ஆசையுடனும் ஊக்கத்துடனும் செய்துவர வேண்டியது அவசியம். பிரசவித்த தாய்க்கு

நம்மவர்கள், மூன்றும் நாள்தான் சோறுகொடுப்பது வழக்கம். பத்தியம் சாப்பிட்டவுடன், தாயானவள் நாலு, ஐந்துமணி நேரம் படுத்துக்கொள்ளவே கூடாதாம்; படுத்துத்தூங்கினால், நீர் தலையில் ஏறி, சுரத்தை யுண்டாக்குமாம். இஃதென்ன முட்டாள் தனம்?

பிரசவித்து நான்கு வாரம்வரை தாய் அதிகநேரம் உட்காரவும் நடமாடவும் கூடாதென்றால், பிரசவித்த மூன்றும் நாளே நெடு நேரம் அவளை உட்காரச்செய்வது, கர்ப்பப் பைக்குக் கெடுதலை விளைவிக்கும் என்பதில் சந்தேகமுமுண்டா?

ஐந்தாவது—பிரசவித்த பெண் களைப்பு நீங்கிப் பலத்தை அடைவதற்கு, அவளுக்குச் சாராயமோ பிராந்தியோ கொடுக்க வேண்டுமென்று சிலர் நினைக்கின்றனர். இது முற்றிலும் தவறு. இவைபோன்ற மயக்கப் பொருள்களினால் தீமையன்றி நன்மை விளையாது. இவை, உண்மையில் பலத்தையும் கொடுக்கமாட்டா. வைத்தியர்கள் அநுமதியின்றி மயக்கப் பொருள்களை உபயோகித்தல் நலமன்று.

மேல்நாட்டார் தற்காலம் மருத்துவத்தில் மிகவும் தேர்ந்தவர்கள். அவர்கள் நிரூபித்த வைத்திய முறைகளின் உதவியினால் பிரசவத்தில் என்ன துன்பங்கள் ஏற்பட்டாலும், தீர்க்க வல்ல மருத்துவ சாஸ்திரத்தில் தேர்ந்த வைத்தியர்கள் தோன்றியிருக்கிறார்கள்? முற்காலத்தில் நம்தேசத்தில் பிரசவ கஷ்டத்தினால் மடிந்த பெண்கள் எவ்வளவோ? இப்பொழுதும் வைத்திய சாலைகளில்லாத நாட்டுப் பக்கங்களில் பிரசவிக்கும் பெண்களின் கஷ்டம் குறையவில்லை. ஆதலால் வெள்ளைக்காரர்களின் மருத்துவமுறைகள் மேலானவையென்று நாம் ஒத்துக்கொள்ளாமலிருக்கமுடியாது. ஆகையால், இதுவரையில் நாம் அறியாத் தனத்தினால் கையாடிவந்த தீயமுறைகளை யனுசரிப்பதை யொழித்து, நம் சகோதரிகளுக்கும், நம் குழந்தைகளுக்கும் உடல் நலத்தை யுண்டுபண்ணும் சுகாதார மருத்துவ முறைகளை யனுசரிப்பது நம் கடமையாகும். மருத்துவத்தொழிலை கற்காதபெண்களின் கையில் பெண்களை ஒப்புவித்து, நம்தேசத்தின் தாய் மரணத்தையும் சிசு மரணத்தையும் பெருக்காமல் நான் மேலே சொன்ன முறைகளைக் கவனித்து, அவற்றின்படி நம் கற்றறிந்த சகோதரிகள் நடக்க முயல்வார்களென்று நம்புகிறேன். கற்றறிந்த சகோதரிகள், கல்லாதவர்களுக்கும் இவற்றை யெல்லாம் எடுத்துச் சொல்லித் தேசத்திற்கு நன்மை புரிவார்களென்றும் நம்புகிறேன்

நிலாவாரை.

இதனை நிலாவாகை, நாட்டு நிலாவாரை, சூரத்து நிலாவாரை என்றும் சொல்லுவதுண்டு. மலையாளத்தில் நிலவாகை, தெலுங்கில் மேலதங்கடு, கன்னடத்தில் மேலவருகி, ஆங்கிலத்தில் சென்னு எனவும், ஹிந்தியிலும், மகாராஷ்டிரத்திலும் சோனுமகியெனவும், அரபியில் சானுஹஜாஸி யெனவும், ஜபாலி யெனவும் பெயருண்டு.

நாட்டு நிலாவாரை சூரத்து நிலாவாரை, என இரண்டு வகையில் நாட்டு நிலாவாரை மஞ்சள் பூ பூத்துக்கொண்டு மூன்று நான்கடி உயரச் செடியாயிருக்கும். இதன் பூவை ஆவாரம்பூ என்று சென்னை முதலிய நகரங்களில் தெருவில் விற்கின்றார்கள். இப்பூவை கரியாக சமையல் செய்து உண்பார்கள். இப்பூவை நிழலிலுலர்த்தி இதனோடு சுக்கு, பறங்கிச் சக்கை, மல்லி முதலியவைகள் சேர்த்து கிழாயமிட்டு பால் சர்க்கரை சேர்த்து காப்பிக்குபதிலாக பலர் அருந்துகின்றார்கள்.

சூரத்து நிலாவாரை அல்லது சீமை நிலாவாரை என்பது முதலில் சூரத்திலிருந்து வந்திருந்தாலும் தமிழ் நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. இதன் இலை இரண்டங்குலம் நீளமும் கால் அல்லது அரை அங்குல அகலமுள்ளதாகவும் கூர்மையாக நீண்டு பச்சை நிறமாயிருக்கும்.

பம்பாய்க்கருகில் பூனாவிலும், சூரத்திலும் மெக்கா, ஜான்சிபார், ஏடன் ஜித்தா போன்ற விடங்களிலும் இது பயிராகின்றது. இந்தியாவின் இதர பாகங்களிலும் இதைப் பயிராக்குகின்றனர்.

இதன் வீரியம்:—கைப்பு. இது பொதுவாகப் பேதிக்கச் (மலத்தை இளக்கும்) செய்யும் குணமுடையது.

இதன் உபயோகமும் இதனால் தீரும் பிணிகளும் :—இதனைக் குடிநீர் (கியாழம்), லேகியம், முதலியவைகளாகவும் இதன் தூள் சேர்த்து வேறு பல மருந்துகளும் செய்யப்படுகின்றன.

இதன் சுத்தி :—இதனுடன் கலந்துள்ள கல், மண், காம்பு, காய் முதலியவைகளை நீக்கி இலையை மட்டும் பசுவின் பால் ஆவியில் வேகவைத்து நிழலிலுலர்த்தி உபயோகிக்க மிக நன்மையைத் தரும்.

இதனால், மலச்சிக்கல், கபம், கோழை, பித்தச் சூடு, தேக மெலிவு, கரப்பான், சொறி, சிரங்கு, உஷ்ணவாயு, சூலை அல்லது சந்துவாதம், கபாலத்தில் துர்நீர் சேர்தல், பாரிசவாய்வு, மூளை

அசுத்தம், ஞாபகமறதி, முகப்பருக்கள், தோலைப்பற்றிய வியாதிகள், மலக்குடலில் உள்ள சிறு புழுக்கள், மூலம் வருவதற்குக் காணும் அறிகுறிகள் அனைத்தும் ஒழியும்.

இதன் பொடி 5-குன்றிமுதல் 15-குன்றிவரையில் தேனில் அல்லது சர்க்கரையில் கலந்து அருந்தலாம்.

நிலாவாரைச் சூரணம் :—நிலாவாரை ஒரு பங்கு, சுக்கு, மிளகு, ஓமம், வாய்விளங்கம், இந்துப்பு கால்பங்கு, சேர்த்து இடித்து சர்க்கரை சமநிடை சேர்த்து 1-விராகநிடை முதல் 2-விராகனிடைவரை உட்கொள்ள வயிற்றுப்பிசம் வயிற்றுவலி, மலபந்தம் நீங்கும். நாட்பட சாப்பிட மேகநோய்களும் நீங்கும்.

நிலாவரைக் கியாழம் :—நிலாவாரை 1-பலம், சுக்கு விராகனிடை 3, இதை ஆழாக்கு வெந்நீரில் காய்ச்சி அதனுடன் ஆமணக்கு நெய் கலந்தேனும், அல்லது எப்சம்சால்ட் என்னும் பேதி உப்பு கலந்தாயினும், அல்லது பழரசம் சிறிது கலந்தாயினும் கால் ஆழாக்கு முதல் அரை ஆழாக்கு சாப்பிட நன்றாக மலங்கழியும். இதனுடன் பாலும், சர்க்கரையும் கலந்து குழந்தைகட்கும் கொடுக்கலாம். நிலாவாரைக் கியாழத்தில் காடி சேர்த்து சொரி, சிரங்கு, படை, புண் முதலியவைகளுக்குத் தடவிவர நீங்கும், இக்கியாழத்தில் தேன்கலந்து நாட்பட சாப்பிட கீல்வாதம் நீங்கும்.

மயிர்கருக்க :—நிலாவாரைக் கியாழத்தில் மாசிக்காய், மருதோன்றி இலையை அரைத்து கலந்து பூசிவர நரைமயிர் கருக்கும். மயிர் உதிர்தலை நிறுத்தும்.

வியாபாரம்:—திருநெல்வேலியிலும், மெக்கா, ஏடன், ஜான்சிபார், ஜித்தாபோன்ற விடங்களிலிருந்து இவை ஏராளமாகப் பயிர் செய்யப்பட்டு பம்பாய்க்குக் கொண்டுவரப்பட்டு பம்பாய்ச் சரக்கு என்றபேரால் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால், பூனாவில் விளையும் நிலாவாரை எங்கும் ஏற்றுமதி செய்யப்படுவதுமில்லை; விற்பனை செய்யப்படுவதுமில்லை. பம்பாயிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு அவை உபயோகப்படுத்தப்படுகின்றன. பம்பாய்க் கடைகளில் உள்நாட்டுக்கென விற்பனை செய்யப்படும் சரக்கு இந்தியாவின் இதர பாகங்களில் விளையும் சரக்கேயாகும்.

இது 9-வது நூற்றாண்டில் ஐரோப்பாவில் அரபியர்களால் முதன் முதல் கொண்டுவரப்பட்டது. பிரான்சில் 1542-ல் இது 1 பவுண்ட் 15 சோல் (பிரஞ்சு நாணயம்) கட்கு விற்பனை செய்யப்பட்டது.

இது ஒரு (cwt) ஏறக்குறைய 5 அல்லது 6 ரூபாய்விற்கிறது.

புகையிலைச் சுருட்டு, சிகரெட், பீடி, மூக்குத்தூள், முதலியவைகளால் உண்டாகும் தீமைகள்

நம் நாட்டில் புகையிலை எவ்வெவ்விதமாக உபயோகப்படுத்தப் பட்டு வருகின்றதென்பதை அனைவருமறிவர். புகையிலை நம் நாட்டில்விளைந்த பொருளன்று. அதற்குரிய அப்பெயரும் புகை பிடிப்பதற்கு உபயோகப் படுவதினின்றும் வந்த காரணப் பெயராகவே காண்கின்றது. இது முதன் முதல் அமெரிக்கா தேசத்தில் உண்டாகிப் பின்னர் இந்தியாவுக்குவந்த "குடியேற்ற"ச்சரக்கேயாகும். இப்போது இந்தியாவின் உஷ்ண பாகங்களிலும், சிறப்பாகப் பர்மாவிலும், காவிரிக்கரையிலும், கோதாவரி ஆற்றிலுள்ளலங்கா பிரதேசங்களிலும் பயிராகின்றது. இப்புகையிலை நம் நாட்டில்தக்க ஆதிக்கம்பெற்று விட்டதன்றி, பிரம்மபத்திரம் எனப் பெயர்பெற்று குமரன் முதல் கிழவன்வரை மக்களால் பல் வகையிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. இப்புகையிலையைக் கொண்டு சுருட்டு, பீடி, சிகரெட்டுக்கள், குடாகுபோன்ற புகைக்கும் வஸ்துக்களும், நாசிக்கென மூக்குத்தூளும், வெற்றிலைப்பாக்குடன்போட்டுக்கொள்வதற்கென அதில் வாசனைகலந்தும் அதன் சாற்றினைக்கொண்டு சில பானங்கள் தயாரித்தும் உபயோகித்து வருகின்றனர்.

பொதுவாக புகையிலையின் குணத்தை ஆராயுங்கால், அதில் ஒருவித நஞ்சுசத்து இருப்பது விளங்கும்; அச்சத்துக்கு நிகொடைன் என்பர். அதனால் புகையிலையின் குணமே, வாய்வாட்சி, துர்ப்பலம், உமிழ்நீர் வடிதல், பித்தாதிக்கம், விந்து நாசம், முதலியவைக ளுண்டாகிறது என்பது அனுபவம். இப் புகையிலையானது மருந்துகளை முறிக்கும் வன்மைவாய்ந்தது. அதற்குத்தான் தமிழ் மருத்துவர்கள் தங்கள் மருந்தை நோயாளர்கட்கு கொடுக்குங்கால் புகையிலை உபயோகிப்பதை அறவே நிறுத்துமாறு கூறுகின்றனர். புகையிலையில் மறைந்துள்ள "நிகொடைன்" என்னும் நஞ்சை ஒரு துளி கொடுத்தால் பூனை, நாய் போன்றவைகள் இறந்துவிடும். அத்தகைய நஞ்சுப்பொருள் பல வழிகளில் மனிதனின் தேகத்தில் ஊறி அவனது செயல்களை ஒடுக்கி மீண்டும் புகையிலையின்றி வேலைசெய்ய வொட்டாதவாறு

தடைபுரிந்து விடுகின்றது. அது மக்களின் தேக மனோவளர்ச்சி யையும், பலத்தையும், ஊக்கத்தையும் கெடுத்து மூளை விகற்பத்தை உண்டாக்கவல்லது. புகையிலையை எவ்வழியிலேனும் உபயோகிப்பவர்கள் குற்றம் செய்யும் குணமுள்ளவர்களா யிருப்பதை அனுபவத்தில் நாம் கண்டறியக் கூடும்.

சுருட்டு

மக்களிற் சிலர், மலபந்தம் நேரிடுகிறதெனவும், சிலர் நாகரிகமெனவும் கருதி, புகையிழுக்கும் வகையில் புகையிலையை சுருட்டுகளாகவும், சிகரெட், பீடி, குடாக்குகளாகவும் உபயோகப்படுத்துகின்றனர். இதனால் மலங் கழியுமென்பதும், உணவு நன்றாக செமிக்கிற தென்பதும் ஒரு சிலரின் கொள்கையாயிருந்தபோதிலும், அதனால் மல இருக்கமும் ஏற்படுமென்பதும் வைத்திய நூல் வல்லாரின் துணிபு. அன்றியும் பரிசுத்தமான பிராண வாயுகலந்து ரத்தம் சுத்திகரிக்கப்படும் இடமாகிய நுரையீரலில் நிகொடைன் கலந்த இந்த நச்சுப்புகைபோய் ரத்தத்தைக்கெடுத்து தேக முழுவதும் நஞ்சுகலந்த ரத்தமோடுமாறுசெய்து மீண்டும் மீண்டும் அவனைப் புகையிலை உபயோகிக்கும்படியான ஒரு வேட்கையைக் கிளப்புகிறது. ஆதலால் புகைபிடிப்பவன் தன் வாக்கைக் காப்பாற்றவோ, குற்றமிலா தூய மனத்தினனாக விருக்கவோ, வியலாது. அதனை வெற்றிலை பாக்குடன்மென்று வருபவர்கட்கு இரைப்பைக் கோளாறுகள் நேர்ந்து அஜீரணம் ஏற்பட்டு குன்மம்போன்ற வியாதிகள் ஏற்பட அடிப்படை ஏற்படுத்தி விடுகிறது; பல் ஈறு கரைந்து பல்லாட்டம் கண்டு விழுந்து போகிறது.

மூக்குப்பொடி

சுண்ணும்பு நவச்சாரம் முதலியனகலந்த புகையிலைத் தூளை மூக்கில் உபயோகப்படுத்துபவர்கள் அநேகமாக மிகப் படித்தவர்களும் பெரிய மனிதர்களெனப் படுவோருந் தான். இவர்கள் தளர்ந்துபோன தங்கள் சக்தி புகையிலையின் தூளால் துரிதமுண்டாக்க முயலுவதாக எண்ணி, அதனில் மயங்கி தங்களின் மூளையை இயற்கைவழியில் சீர்ப்படுத்தாது புகையிலைத் தூளின் நஞ்சு கலந்து நாசமுறும்படி செய்துவிடுகின்றனர்.

மூக்குத்தூள் போடுகிறவர்களின் குரலோசை மாறிப் போய் விடுகிறது. அவர்கள் எப்போதும் மூக்கடைப்புள்ளவர்களாகவே இருப்பார்கள். மூக்கில் நீர் வடிந்தவண்ணமாகவே இருக்கும். இவர்கள் புகையிலைத் தூளோடுகலந்த மூக்குச்சளியை எந்தவிடத்திலேனும் சிந்தி வீட்டையும் வீட்டிலுள்ள தூண், வாசற்கால், மேசை, குறிச்சி, சன்னல், இரயில், டிராம் வண்டி முதலியவை

களையும் அசுத்தமடையச் செய்வார்கள். மூக்குத்தூள் போடுகிறவர்கள் அருகில்வந்தாலும் புகையிலை கெட்ட மணம் வீசும்.

இப்புகையிலைப் பொடியை சிலர் பல்லில் அடிக்கடி வைத்துக் கொண்டு கண்ட இடங்களிலெல்லாம் எச்சிலைத்துப்புவார்கள். இவர்களின் பல் ஈறுகரைந்து மிக விரைவில் பல் வேரோடு கழன்று போகின்றது.

சிலர், தங்கள் குழந்தைகளின் மலக்கட்டுக்கு புகையிலைக் காம்பை மலவாயிலில் வைக்கின்றனர். இது மிகவும் கொடியவழக்கம். சிலர் பல்வலிக்கென இதை உபயோகிக்கின்றனர். இதிலுள்ள நஞ்சு பற்சொத்தைகளில் உண்டாகும் புழுக்களைக்கொன்று தர்காலம் சுகம் தருமெனினும் பற்களின் எகிரைக்கரைத்து வேர்களையும் பங்கப்படுத்துகின்றது. ஆதலால் எல்லாவகையிலும், புகையிலையை எவ்வகையில் உபயோகிப்பவர்களும் சிறிதேனும் நலம்பெறுவதில்லை; தீமையே அடைகின்றார்கள்.

பொதுவில் புகையிலையை உட்கொள்ளும் வகைகளில் உபயோகப்படுத்தி வருபவர்கட்கு விந்துநாசம், கனவில்கழிதல், விந்து மலமூத்திரங்களுடன் கழிதல், வெட்டை, நரம்புத்தளர்ச்சி, குன்மம், க்ஷயரோகம், ஆசனக்கடுப்பு, ஞாபக மறதி, மார் அடைப்பு, பித்தாதிக்கம், வாய்வரட்சி, பலக்குறைவு முதலியவைகள் மெல்ல மெல்ல உண்டாகிவரும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. பிரபல மருத்துவர்கள் பலர், மேனாட்டு மருத்துவர்களுங்கூட ஆண்மைகுறைந்தும், தேக, மனோ உறுதியற்றும், கோழைகளாயும், மக்கள் இருப்பதற்கு இப்புகையிலைப்பழக்கமே முக்கிய காரணமாகும் என அறிவுறுத்தி யிருக்கின்றனர்.

கண்புகையும், நெஞ்சுலரும், கைகால் அசந்துவரும்
வெண்புகையாய் மேனி வெளுக்குமே—பண்பாய்க்கேள்
ஈரல் கருகிவரும் இந்திரிய நஷ்டமாம்
பாழும் புகையிலையின் பண்பு

என சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

ஆனால், இந்தப் புகையிலையையே வெளிப்பிரயோகங்களாக (வெந்நீரில் கியாழம்போட்டு) உபயோகிப்பதில், கரப்பான், சொரி சிரங்கு, கட்டி போன்றவைகள் ஒழியும்.

மக்கள் அனைவரும், முக்கியமாக இளைஞரும், புகையிலையை எந்தவகையிலும் உபயோகிப்பதை அறவே விட்டொழித்தல் வேண்டும். தங்களுக்குத் தாங்களே நஞ்சூட்டிக்கொண்டு தங்கள் ஆயுட்காலமெல்லாம் நடைப்பிணங்களாக இருப்பதை எவர் விரும்புவர்? எனவே, அதை உபயோகிப்பவர்கள் தங்களைப் பீடித்துள்ள

கெட்ட வழக்கத்தினின்றும் விலகி, தங்கள் வாணுளைக் கோழைத் தனத்தில் கழித்து விடாமல் நற்பழக்கங்களைக் கைக்கொண்டு வீர மக்களாக நாட்டிற்கு நலன் புரியுங்கள்.

வெளிநாட்டுப் புகையிலையில் செய்யப்படும் சிகரெட்டு, பீடி முதலியவைகளும் இதே குணமுடையவைகள். அந்தப் புகையிலையை பாடம் செய்கிறபோது அதில், அபின், கஞ்சா முதலிய மயக்கந்தரும் சில நஞ்சுப் பொருள்களின் ஊரல் நீரால் நஞ்சுத் தன்மையை அதிகரிக்கச் செய்வதாகவும் அறிகின்றோம். அதனால் அதை உபயோகித்தவர்கள் திரும்பவும் அடிக்கடி சிகரெட்டு, பீடி குடிக்காவிட்டால் செயலற்று ஒன்றிலும் மனஞ்செல்லாமல் வீட்டில் இருக்கும்போதும் தெருக்களில் நடக்கும்போதும் ரயில், டிராம், வண்டிகளில் போகும்போதும், நாடகக்கொட்டை, சினிமா முதலிய இடங்களிலும் ஓயாமல் இப் புகைகளைக்குடித்து தாங்கள் கெடுவதோடு இவைகளை உபயோகிக்காத பக்கத்திலுள்ள மற்றவர்கள் சுவாசிக்கும் நல்லகாற்றையும் நஞ்சாக்கி துன்பப்படுத்துகின்றார்கள். கள், சாருயம் முதலிய குடிகளில் புகையிலை குறைந்ததல்ல இதனை அரசாங்கத்தார் தடுக்கவேண்டும்.

நீர்முள்ளி.

நீர்முள்ளிக்கு தெலுங்கில் நீருகொப்பி என்றும், மலையாளத்தில் வயல் சுள்ளி என்றும், கன்னடத்தில் முல்லன் கோலி என்றும், ஹிந்தி மொழியில் டல்மக்ஹாரா என்றும், வங்காளி மொழியில் குலியகாரா என்றும், சமஸ்கிருத மொழியில் கோரிலக்ஷா என்றும் இக்ஷுகந்தா என்றும், சிங்களத்தில் காட்டுகுகிசி என்றும் பெயர்களுண்டு.

குணமும் உபயோகமும்:-நீர்முள்ளிவிதைகள் தேகத்திலுள்ள வெப்பத்தையாற்றிக் குளிர்ச்சியுண்டாக்கி, மூத்திர சம்பந்தமான சகல பிணிகளையும் அகற்றி சுக்கிலத்தை முதிரச்செய்யும் சக்தி வாய்ந்தது. இதன் வேர்களும் மேற்கூறியவைகட்கு உபயோகப் படுவதல்லாமல், மகோதரம், முடக்குவாதம் போன்ற வியாதிகட்கும் இது பயன்படுகிறது. இதன்வேரை முடக்குவாதத்திற்கு வெளிப்பிரயோகத்திற்கும் உபயோகிக்கலாம். இதன் விதைகளை பால், அல்லது சர்க்கரையில் உட்கொள்ள தாது கட்டும். மலையாளத்தில் விசேஷமாக இதன் வேரைக்கொண்டு கஷாயம் இரக்கி, மூத்திர ரோகங்களுக்கும், வயிற்றுப்பிச வியாதிகட்கும், குண்டிக்காய் சம்பந்தப்பட்ட நோய்கட்கும், நீர்க்கோவைக்கும் அரைகுவளை கியாழம் தினம் இரண்டுவேளை கொடுக்கப்பட்டுவருகிறது.

விவரமும் விளையும் இடமும்:—தென்னிந்தியாவிலும், வட இந்தியாவிலும் சதுப்பு நிலங்களிலும், நீருள்ள விடங்களிலும் ஏராளமாக விளையும். இது இரண்டு அல்லது மூன்றடி உயரம் வளரும்; இச்செடியில் சுணையுண்டு. பல கிளைகளுள்ளதாயும் நிமிர்ந்து வளர்ந்தும் இருக்கும். இதன் பூ சிறிது வெண்மைகலந்த பிரகாசமான நீலநிற முள்ளதாயிருக்கும். இதன் கிளைகளுங்கூட சுணை மிகுந்ததாகவேயிருக்கும். இதன் விதைகள் சிறியவைகளாகவும் தட்டை வடிவமுள்ளவைகளாகவும், சிறிது சிவப்பு கலந்த கபிலநிறமாகவும், ஏறக்குறைய 1/10 அங்குல நீளமாகவும் 1/16 அங்குல அகலமாகவும் இருக்கும். இவ்விதைகளை வாயில் போட்டவுடனே அல்லது நீரில் போட்டவுடனே அது குழகுழப்பான பசையுடன் கூடியிருக்கும்.

பெருக்கக்கண்ணாடி (மைகிராஸ்கோப்) ஆராய்ச்சி:—இதன் விரையில் ஒரு துளி தண்ணீரைவிட்டபிறகு பெருக்கக்கண்ணாடியால் பார்வையிட்டால், அவ்விதை குழகுழப்பான பசையுடன் எழும்புவது நன்கு தெரியும். அது மிகவிரைவாகவே "சப்ஜா" விதையைப்போன்று எழும்பிவிடுகின்றது. அவைகள் தண்ணீர் விடப்பட்டு பசையுடன்கூடி ஒன்றாய்க் கலந்து கொண்டிருக்கும்போது எவ்வளவு நீர் விட்டாலும் பிரியாது.

வியாபாரம் விலை:—37½-பவுண்டுகள்கொண்ட ஒரு மணங்கு ஏறக்குறைய சுமார் ரூபா ஆறுக்கு விற்பனைசெய்யப்படுகிறது. இதை இந்தியாவில் அவ்வளவாகக் கவனித்து பயிர்செய்வதில்லை. இது சதுப்பு நிலங்களில் நன்கு பயிராகுமென்று முன்னமேயே கூறியுள்ளோம். நீர்முள்ளி விதைக்கென தனி வியாபாரங்கள் பம்பாய்போன்ற விடங்களில் நடைபெறுகின்றன.

இது சேர்ந்த மருந்துகள்:—தென்னிந்தியாவிலோ, வட இந்தியாவிலோ செய்யப்படும் தாதுபுஷ்டி மருந்துகள், லேகியங்கள், சூரணங்கள் அனைத்திலும் இதன்விதைகள் சேராமலிருப்பது கிடையாது. இதை தனியாகத் தூள்செய்து பாலுடனும் சர்க்கரையுடனும் கலந்து சாப்பிட தேக உஷ்ணம் தணியப் பெறுவதும் தாதுவிருத்தியு முண்டாகுமென்பது தமிழ் மருத்துவர்களின் துணிபு.

மருத்துவ குலத்தவர் தொகுதி

தஞ்சை சம்ஸ்தானத்தை ஆண்ட சிவாஜி அரசர் மருத்துவ குலத்தினராம்

தஞ்சை சம்ஸ்தானத்தை ஆண்ட சரபோஜி அரசன் காலத்தில் பாம்பரை மருத்துவர்களாகிய ஆருவமுத வைத்தியர், ரங்கசாமி வைத்தியர் என இருவர் சம்ஸ்தான தமிழ் வைத்தியர்களாக இருந்தனர். இவர்களோடு கற்பகத்தாய் என்னும் மருத்துவ குலப் பெண்வைத்தியர் அரசனின் மனைவிமார்களுக்கு வைத்தியம் புரிந்து வருபவர். சரபோஜி அரசன் ஆண்குழந்தை இல்லாமல் வருந்திக்கொண்டிருந்த காலத்தில் அரசி கருப்பெற்று பத்துமாதமானதும் ஆண்குழந்தையாகப்பிறக்க வேண்டுமென்னும் கவலை அரசாங்கத்தில் எல்லோருக்கும் மிகுதியாயிருந்தது. சம்ஸ்தான மருத்துவச்சி கற்பகத்தாய் அரசி பெறப்போவது ஆண்குழந்தையாயிராதென நுட்பமாய் அறிந்து தங்கள் வகுப்பினரில் ஒரு ஏழைப்பெண்ணும் அரசியும் ஒரேகாலத்தில் கரு உயிர்ப்பார்களென்பதையும் தெரிந்திருந்தமையால் அம் மருத்துவ குலப்பெண் பெறும் ஆண் குழந்தையை அரசாங்கத்துக்குக் கொடுத்துவிடும்படியும் அதற்குவேண்டிய பொருளைக் கொடுப்பதாகவும் அந்தரங்கமாக ஏற்பாடு செய்துவைத்திருந்து மருத்துவகுலப்பெண் பெற்ற ஆண் குழந்தையை அரசியினிடத்தும், அரசிபெற்ற பெண்குழந்தையை அந்த ஏழைப் பெண்ணிடத்தும் மாற்றிவிட்டாள். அந்த ஆண் குழந்தைதான் சரபோஜியின்மகன் சிவாஜி அரசன். இந்த சாமர்த்தியமான செய்கையைச் செய்த மருத்துவி கற்பகத்தாய்க்கு சரபோஜிராஜா இரண்டுகைக்கும் தோடாவும் விலையுயர்ந்த ஆபரணங்களும், நிலம் வீடு முதலியவைகளும் பரிசாகக் கொடுத்திருக்கின்றனர். அந்த மருத்துவ கற்பகத்தாயின்வீடு தஞ்சை சண்பகவல்லிமால் சந்தில் இன்று மிருக்கிறது. சிவாஜி அரசர் காலமானபிறகு அச்சந்ததியார் கும்பகோணம் போய்விட்டார்கள்.

ஆனல், இந்த அந்தப்புற நிகழ்ச்சி வெளிப்படாமல் அரசர் சரபோஜியின் மனைவிபெற்றது ஆண்குழந்தை என்றே சிவாஜி பிறப்புவிழா கொண்டாடி உலகத்தார் அறியும்படி செய்தும், இருவர் அறிந்த ரகசியமில்லை என்றபடி, எந்த பாமரகசியமும் வெளியாகும்வழக்கம்போல் வெளியாகி விட்டது. ஆனல் பெரிய இடத்து

சங்கதியாதலால் இதனைத் தெரிந்தவர்களும் வெளியிடாமல் இருந்தனர். இவ்வரலாறு தஞ்சை சம்ஸ்தானத்திலுள்ள முதியோர் சிலர் கூறுகின்றனர். இது உண்மையாயிருந்தால் தஞ்சை சம்ஸ்தானத்துக்கு பெருமைக்குறைவும், மருத்துவ வகுப்பினருக்கு பெருமையும் ஏற்படப்போகிறதில்லை. இதில் நாம் கவனிக்கவேண்டியது அக்காலத்திலிருந்த மருத்துவமாதர்கள் தாய் கரு உயிர்க்குமுன் தாய் வயிற்றிலிருப்பது ஆண் பெண் என்பதை அறியும் மருத்துவ அறிவு நுட்பமும், சமயோசித புத்தியும் கொண்டாடுதற்குரியது.

இக்காலத்தில் அப்பாரம்பரை வைத்தியகுல ஆண் பெண்கள் என்ன நிலையிலிருக்கிறார்கள் என்பதைப்பார்த்து நாம் மிகவருந்துகின்றோம்.

ஓர் தமிழன்

மருத்துவகுலப் பெண்களுக்கோர் நல்ல சமயம்

தென் இந்திய மருத்துவர் சங்கத்தலைவரும் சென்னை கார்ப்பொரேஷன் அங்கத்தினருமான பண்டிட் ஆனந்தம் அவர்கள் சென்னை நகரசபையில் மருத்துவகுலப் பெண்களுக்கு இன்றியமையாத ஓர் அரியதீர்மானத்தைக்கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளார். அதனை நம் நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் போற்றாமல் இருக்கவியலாது. இத்தீர்மானத்தின் முழுவிபரமும் இச்சஞ்சிகையின் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிறது. இந்த நல்ல சமயத்தை மருத்துவகுலப் பெண்களில் எத்தனைப்பேர் பயன்படுத்திக்கொள்ளப் போகின்றார்களோ நாம் அறிகிலோம். முதன் முதலாகக் கவனிக்கவேண்டியது, பரம்பரை மருத்துவ குலப்பெண்மக்கள் இப்பொழுதுள்ள கேவலமான நிலைக்குக் காரணம் என்ன என்பதை உணர்ந்து, அதனை அகற்றுவதுதான் மருத்துவரின் முன்னேற்றத்துக்கு வழியாகும். மருத்துவ குலப்பெண்கள் பரம்பரை வைத்திய குடும்பத்தில் பிறந்து பெண் மக்களுக்கு வைத்தியம், பிரசவம், குழந்தை வைத்தியம் முதலிய பேருபகாரச் செயல்கள் இவர்கள் வசமே இருந்து வந்தது. தற்காலம் மற்றவகுப்பினரால் மருத்துவர்கள் இழிவாக நடத்தப்படுவதை உணரும் அறிஞர்களில் எவர்தான் மனம்பதறாம லிருக்க முடியும்? இவர்களுக்குள்ள தொழில் எல்லா வகுப்பினராலும் போற்றுதற்குரியது. இவர்கள் குலத்தொழிலை தற்காலம் கற்றுச்செய்யும் வேறுகுல மக்களெல்லாம் பிறரால் மரியாதையாக நடத்தப்பட்டு இவர்கள் மட்டும் தாழ்மையாகக் கருதப்படுவா

னேன்? இவர்கள் காலத்துக்கேற்ற முறையில் அத்தொழிலை கற்காததேயாகும் என்பதை அறிதல் மிகவும் அவசியம். இம்மாதம் மருத்துவன் முதற்பகுதியில் வெளியிட்டுள்ள பிரசவஜன்னி என்னும் தலைப்பின்கீழ் வெளிவந்திருக்கும் விஷயத்தில் ஆஸ்பத்திரி நர்ஸ்களைக்கொண்டே பிரசவிக்கும் தாய்க்கு வேண்டிய சிகிச்சைகள் புரியக் கூறப்படுகிறது. நாட்டு மருத்துவச்சியும், வீட்டு மருத்துவச்சியுமாகிய பரம்பரை மருத்துவச்சிகளைக் கல்வி அறிவில்லாதவர்கள் எனக் கண்டிக்கப்படுகிறது. காலத்துக்குத் தக்கபடி மருத்துவகுல மாதர்களின் கல்வியின்மையும், அறிவின்மையும் நற்பழக்க மின்மையுமே இவ்வளவு கேவல நிலைக்குக் காரணமாகும். சுயமரியாதைக்கும், குல முன்னேற்றத்துக்கும் பாடுபடும் மருத்துவ வகுப்பினர் தங்கள் தங்கள் வீடுகளிலுள்ள முப்பது வயதுக்குட்பட்ட விதவைப் பெண்களையும், மற்றப் பெண்களையும் நமது தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானப்படி மாதம் பத்து ரூபாவைப் பெற்றுக் கொண்டு ஆஸ்பத்திரிகளில் ஆறுமாதமாவது பழக விடவேண்டும். அங்கு பழகுவதற்கு கல்விப்பயிற்சி அதிகமிருக்கவேண்டிய தவசியமில்லை. அம்முறைகளைக் கண்ணால்பார்த்துப் பழகினால் போதும். இதுவே சுயமரியாதையுள்ள ஒவ்வொரு மருத்துவ குல ஆண் மகனும் செய்யும் முதல் வேலையாகும். இல்லையேல் பண்டைக்காலத்தில் உயர்ந்த நிலையிலிருந்த மருத்துவமக்களை மற்ற தாழ்ந்த வகுப்பினரும்தற்காலம் இழித்து கூறுவதைச் செவிசாய்த்து கேட்டுக்கொண்டிருப்பதைவிட பரம்பரை மருத்துவமக்கள் இறப்பதே மேலெனத் துணிந்து கூறுவோம். இச் சந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்கள்.

ப. சிற்சபை

சுயமரியாதைத் திருமணம்

திருநெல்வேலி கற்பதரு வைத்தியசாலை, வைத்தியபதி எஸ். முத்துசாமி பண்டிதரின் சிறிய தகப்பனார் மகன் எஸ். வேலாயுதம் என்பவருக்கும் சிங்கிகுளம் சுடலைமுத்து பண்டிதர் மகள் செண்பகவல்லிக்கும் 13-11-29 புதன்கிழமை காலை திருநெல்வேலி ஜில்லா மருத்துவர் சங்கத் துணைத்தலைவரும், ரிட்டயர்டு மெடிகல் ஆபீசருமான டாக்டர் எம். பி. சங்கரசுப்பு அவர்களாலும், தென்காசி மருத்துவமணி பண்டிட் கே. முருகையா அவர்களாலும் அருத்தமற்ற சடங்குகளின்றி திருமணம் வெகு விமரிசையாக நடத்திவைக்கப்பட்டது. இத் திருமணத்தில் மொய்ப்பணம் போடும் வழக்கத்தையும் நிறுத்தப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

நன்கொடை

தஞ்சாவூரைச் சார்ந்த மாரியம்மன் கோயில் குளிசப்பட்டு மருத்துவ குலாபிமானி V. K. அரங்கசாமி பிள்ளை அவர்கள் தமது மனைவி திருவளர். செல்லம்மாளுக்கு ஆணும் பெண்ணுமாக இருகுழந்தைகள் பிறந்து மங்கையர்க்காசி மாணிக்கவாசகன் எனப் பெயரிட்ட மகிழ்ச்சிக்குறியாக நமது மருத்துவன் பத்திரிகைக்கு ரூபா ஐம்பது (50) நன்கொடை கொடுத்துள்ளார். அதனை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டு திருவருளால் அவருக்கு எல்லா நலங்களும் எய்துமாறு கோருகின்றோம். ப-ர்.

திருநெல்வேலி ஜில்லா மருத்துவர்சங்கக் காரியதரிசிகளில் ஒருவரும் கற்பதரு வைத்தியசாலை வைத்தியருமாகிய திரு. சு. முத்துசாமி பண்டிதர் அவர்கள் தமது சிறிய தகப்பனார் மகன் திரு. எஸ். வேலாயுதத்தின் திருமணத்தின்போது ஒரு ரூபாவும் தமதுவீட்டில் நடைபெற்ற மற்றொரு நன்மைக்காக ஒரு ரூபாவும் மதுரை டவுன் 3-வது வட்டம் மாகாளிப்பட்டி வீதி திரு கருப்பண்ணன் அவர்கள் புதுமனை புகுந்தபோது ஒரு ரூபாவும் நமது மருத்துவன் பத்திரிகைக்கு அன்புடன் நன்கொடையாக அளித்தமைக்கு நன்றி பாராட்டுகின்றோம். ப-ர்.

கமலாம்பாள் அம்மையின் மரணம்

சரம்பார்த்து மணிசொல்லும் ராஜயோகி வைத்தியர் சாமிநாத பிள்ளை அவர்கள் மனைவியும், தென்னிந்திய மருத்துவர் சங்க ஸ்தாபகரும், தலைவரும், சென்னை நகர பரிபாலனசபை அங்கத்தினருமான பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் அன்னையுமான கமலாம்பாள் அம்மை அவர்கள் தனது 70-வயதில் கும்பகோணத்தில் தமது இல்லத்தில் மக்களும் மற்றவர்களும் அருகிலிருக்க மரணவஸ்தையின்றி நல்ல நினைவுடன் 14-1-30 செவ்வாய்க்கிழமை காலை 5-மணிக்கு உடல் நீத்தார். அன்னாரின் தகனக் கிரியைகள் பொருத்தமற்ற சடங்குகள் இன்றி நடைபெற்றன. 11.ம் நாள் இறுதிக்கடனும் ஒரு சடங்குகளுமின்றி உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும் உண்டியளிக்கப்பட்டன. மாலை மருத்துவர்மடத்தில் கருப்பண்ணசாமி நாடார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம்கூடிப் பலர் நமது மக்களிடையே ஊன்றிக்கிடக்கும் மூடக்கொள்கைகளை யொழிக்க அதன் உண்மைத்தத்துவங்களை எடுத்துவிளக்கினார்கள்.

பண்டிட் ஆனந்தம் அவர்கள்

சென்னைக் கார்ப்பொரேஷன் கவுன்சிலில் நிறைவேற்றிய தீர்மானம்

"சென்னையில் பாரம்பரைமருத்துவச்சிகள் தொகையில் அதிகம் இருப்பதாலும், அவர்களே பொது ஜனங்களுக்குப் பிள்ளைப்பேறு முதலியவைகளைப் பரம்பரையாகப் பார்த்துவருவதோடு, குழந்தை பிறந்தது முதல் ஒருவருடம் இரண்டு வருடங்கள்வரை அக்குழந்தைகட்கு முழுக்காட்டுதல் நோய்களுக்கு மருந்துகொடுத்தல் முதலிய உதவிகள் செய்துவருவதாலும் அம்மருத்துவ வகுப்பைச் சார்ந்த 30 வயதுக்குட்பட்ட பெண்களில் வருஷத்திற்குக் குறைந்தது 30 பெயருக்கு மாதமொன்றுக்கு ஒரு பெண்ணுக்கு 10 ரூபா வீதம் கார்ப்பொரேஷனில் பண உதவிசெய்து பிள்ளைப் பேறு பார்ப்பதற்குவேண்டிய விஷயங்களை அவர்களுக்குத் தேசபாஷையின் மூலமாகவே ஒரு வருஷம் கற்பிக்கவேண்டுமென்றும், அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள பிரசவ ஆஸ்பத்திரிகளில் நேரில் கண்கூடாகப் பார்த்துப் பழகும்படி அவர்களைப் பயிற்றுவித்தல் வேண்டுமென்றும் இச்சபை தீர்மானிக்கிறது. இது பாரம்பரை மருத்துவச்சிகட்குப் போதுமான தற்கால அனுபவப் பயிற்சி யளிப்பதுடன் குழந்தை பரிபாலனத்திற்கென (Child welfare central) ஏற்பட்டுள்ள தனிச்செலவைச் சிறிது சிறிதாகக் குறைத்தற்கும் ஏதுவாயிருக்கும்."

பண்டிட் ஆனந்தம் அவர்கள்

சென்னை கார்ப்பொரேஷனில் கொண்டுவந்திருக்கும் தீர்மானங்கள்

"சென்னை அரசாங்க இந்திய வைத்திய பாடசாலையில் பயிலும் மாணவர் சிலருக்கு வெளியூர்களிலுள்ள முனிசிபாலிடிகளிலும், ஜில்லா போர்டு, தாலுக்காபோர்டுகளிலும் உபகாரச் சம்பளம் (ஸ்டைபண்ட்ஸ்) கொடுக்கின்றார்கள். சென்னையில் ஏற்படுத்தப்போகும் இந்திய வைத்திய சாலைகளில் வேலைசெய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் அரசாங்க இந்திய மருத்துவ பாடசாலையிற்படிக்கும் ஏழை மருத்துவமாணவர் சிலருக்குச் சென்னைகார்ப்பொரேஷன் பண உதவிசெய்தல் வேண்டுமென்றும் அதனால் ஏற்படும் செலவிற்கு வேண்டும் பணத்தை வேறு விஷயத்திற்குச் செலவுசெய்ய வைக்கப்பட்டு அதற்காகச் செலவழிக்கப்

படாத தொகையினின்று எடுத்துக்கொள்ள ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று சென்னைக் கார்ப்பரேஷன் கமிஷனரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது''

"சென்னையில் வாழும் ஜனங்களில் முக்கால் பாகத்தினர் தமிழர்களாக இருப்பதாலும் அவர்களுள் பெரும் பாலராகிய ஆண், பெண்கள் ஆங்கிலம் அறியாதவராகையினாலும், தெரு முனைகளிலும், போக்குவரவு சம்பந்தப்பட்டதும், மற்ற விஷயங்களைப் பற்றியதுமான அறிக்கைகளையும் தெருப்பெயர் விளக்கும் போர்டுகளையும் புதிதாக இப்போது இங்கிலீஷில் மட்டும் போடுவது சரியல்லவென்றும், தெருக்களிலும் மற்றப்பொதுவிடங்களிலும்முன் இருந்ததுபோல் ஆங்கிலத்துடன் தமிழிலும் எழுதப்படவேண்டுமென்றும், சென்னை நகரத்தெல்லைக்குட்பட்ட ரயில்வே ஸ்டேஷன்களாகிய பீச், போர்ட், பார்க் முதலிய ஸ்டேஷன்களின் பெயர்களை முறையே அதன்கீழ் கடற்கரை, கோட்டை, தோட்டம் என்றும் எழுதப்படவேண்டுமெனவும் சென்னை மின்சார வண்டி கம்பெனிக்காரர்கள் டிராம் வண்டிகளில் போட்டுள்ள போர்டுகளையும் டிராம்வண்டி நிற்கும் இடங்களைக் குறிக்கும் போர்டுகளையும் ஆங்கிலத்தோடு தமிழிலும் எழுதல் வேண்டுமெனவும் மோட்டார் பஸ் நிற்கும் இடங்களிலும் தமிழிலும் போர்டுகள் எழுதப்பட வேண்டுமெனவும் இச்சபை தீர்மானிக்கிறது.''

"ஏழை மக்களும் தொழிலாளர்களும், மத்திய வகுப்பினர்களும் தமது சக்திக்கு மிகுதியான குழந்தைகளைப்பெற்றுத் துன்புறுவோருக்குச் சென்னையிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும், முனிசிபல் ஆஸ்பத்திரிகளிலும், குழந்தை பரிபாலன ஸ்தாபனங்களிலுமுள்ள டாக்டர்களும், மருத்துவச்சிகளும் ஆபத்துகள் விளைவிக்காத யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கர்ப்பத் தடைமுறைகளை எடுத்துரைக்கவேண்டிச் சில முக்கியமானமுறைகளை அச்சிட்டு உதவும்படி சென்னை அரசாங்க சர்ஜன் ஜெனரல் அவர்களை இச்சபையோர் கேட்டுக்கொள்ளுகின்றனர்.''

"தேகாரோக்கியத்தைக் கருதியும் மத ஆசாரங்களையொட்டியும் கடலில் நீராடச் செல்லுவோருக்குச் சென்னை ஐகோர்ட்டுக்கெதிரிலுள்ள கடற்கரையில் அபாயமில்லாமல் குளிப்பதற்கேற்ற ஓர் நீராடும் துறையைக் கூடியவிரைவில் கட்டிக்கொடுக்குமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென இச்சபையோர் தீர்மானிக்கின்றனர்.''

தென் இந்திய மருத்துவர்சங்கம்
நிகழ்ச்சிக் குறிப்பு

மருத்துவ ஞாயிறு பண்டிட் ஆனந்தம் அவர்களால் சென்னையில் 18-9-1921 ஆம் நாள் நிறுவப்பட்ட தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் நிகழ்ச்சிக்குறிப்புகளை 29-1-1928ந்தேதிவரை மருத்துவன் 6-வது, எழாவது இதழ்களில் வெளியிட்டிருக்கின்றோம். அதன் பிறகு, நிகழ்ச்சிகளை இதனடியில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

மருத்துவர்களின் மதமாற்றம்

27-2-28ல் தென் இந்திய மருத்துவர் சங்க நிலையத்தில் பத்தமடை டாக்டர் எம். பி. சங்கரசுப்பு பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு கூட்டங்கூடி அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. உயர்ஜாதியினரென்போர் தனித்தனி ஜாதிப்பட்டங்களை விட்டு எல்லோரும் தமிழர் என்னும் ஒரே ஜாதியினராகும்வரை மருத்துவர்களுள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் பலவிதப் பட்டங்களை வைத்துக்கொள்ளாமல் பிள்ளையென்னும் பட்டத்தையே எல்லோரும் வைத்துக்கொள்ளுதல்வேண்டும்.

2. ஆலயப் பிரவேசமில்லாத இந்துக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஆலய நுழைவிற்குப் பெருங்கிளர்ச்சி செய்யவேண்டும்.

3. மருத்துவர்களுக்குத் தமிழ் நாட்டில் திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் முதலிய சில ஜில்லாக்களில் ஆலய உரிமை கொடுக்காவிடில் தென் இந்தியாவிலுள்ள சுமார் பதின்மூன்று லட்ச மருத்துவர்களும் முகம்மதிய மதத்தில் சேரும்படியான முயற்சியை விரைவிற் செய்யவேண்டும்.

4. அரசியலில் சட்டமெம்பர் பதவி காலியாயிருக்கு மிடத்திற்குப் பிராமணரல்லாதார் ஒருவரை நியமனம் செய்யவேண்டுமென அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வது. இத்தீர்மானத்தைச் சென்னை கவர்னருக்கும் அனுப்பி, இந்திய மந்திரி லார்டு பர்க்கென் ஹெட்டுக்குந் தந்திகொடுக்கப்பட்டது.

சைமன் கமிஷனுக்கு வரவேற்பு

1-3-1928ல் சென்னை கடற்கரை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்டுமெண்டில் சர்ஜான் சைமன் அவர்கட்கும் அவர் துணைவர்கட்கும் பண்டிட் ஆனந்தம் அவர்களால் வரவேற்கப்பட்டுச் சரிகை மாலை

களும் ரோஜாமாலைகளும் சூட்டப்பெற்று டாக்டர். எம். பி. சங்கர சுப்பு அவர்களால் ஆங்கிலத்திலும் ஸ்ரீமான் பண்டிட் ஆனந்தம் அவர்களால் தமிழிலும் உயர்ந்த பட்டில் அச்சிட்ட வரவேற்புப்பத்திரங்கள் படித்துக்கொடுக்கப்பட்டன. அவ்வமயந்திருநெல்வேலி ஜில்லா மருத்துவர்சங்க காரியதரிசியும் தலைவரும் தஞ்சை ஜில்லா, செங்கற்பட்டு ஜில்லா முதலிய விடங்களிலிருந்து பிரதிநிதிகள் பலர் வந்திருந்ததுடன் சென்னையிலிருந்து ஆண்களும் பெண்களும் நூற்றுக்கணக்காகக் குழுமியிருந்தனர். சர்ஜான் சைமன் அவர்கள் வரவேற்புப்பத்திரத்திற் கண்ட விஷயங்களைப் பற்றிச் சுமார் இருபத்தைந்துநிமிடம் வரை அன்புடனும் இரக்கத்துடனும் பதில் கூறினர். அதன் முழுவிவரம் மருத்துவன் பத்திரிகையிலும் திராவிடன், குடி அரசு முதலிய பத்திரிகைகளிலும் வந்துள்ளது.

நீதிமன்றங்களில் திருக்குறள்

23-3-28ல் சங்க நிலையத்தில் ஆக்ரா, பாபு சுஜான் சிங்கு அவர்கள் அவைத்தலைமையில் ஒரு கூட்டம்கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. சென்னை அரசாங்க இந்திய வைத்திய பாடசாலையிற் பயிலும் மாணவர்கட்கு மேல் நாட்டு இரணவைத்தியமும் கற்பிப்பதைப்பற்றியும், அப்பாடசாலையைச்சேர்ந்த வைத்தியசாலையில் சித்தமருந்துகளால் பல நோயாளர்கள் விரைவில் நோய் நீங்கி நலமடைந்து வருவதைப்பற்றியும் இச்சங்கத்தார் மகிழ்ச்சியடைகின்றனர்.

2. சித்தவைத்திய நூல்கள் பாடல்களாயிருப்பதைப் பாடசாலைக்குவேண்டிய அளவில் திரட்டவும், உரைநடையில் பாடபுத்தகங்கள் எழுதவும் அரசாங்கத்தினர் விரைவில் ஒருகமிட்டி ஏற்படுத்தவேண்டும்.

3. அரசாங்க இந்திய வைத்திய பாடசாலையில் பரம்பரை மருத்துவகுல மாணவர்களைச் சம்பளமின்றிச் சேர்த்துக்கொள்ளுவதுடன் அவர்களில் மிக ஏழையாயுள்ளவர்கட்கு உபகாரச் சம்பளமும் கொடுக்கவேண்டும்.

4. மேல்நாட்டைப் போல் இந்தியாவிலும் சர்வகலாசாலையில் சவுளஞ்செய்யுந்தொழிலையும் ஒரு பாடமாகச் சேர்த்துச் சுகாதார முறையாகச் செய்யும்படி மாணவர்களைப் பழக்கவேண்டுமென்னும் தீர்மானத்தைச் சென்னைச் சட்டசபையிற் கொண்டுவர வேண்டும்.

5. சென்னைச்சர்வகலா சங்கபாடசாலையில் இந்திய சங்கீதத்தையும் ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

6. பொதுஜன நடமாடுமிடங்களில் உடம்புமுழுவதும் திறந்துகொண்டு மயிர் சிரைத்துக்கொள்பவர்களையும், அத்தொழிலைச் செய்பவர்களையும் அரசாங்கத்தார் தண்டனைக் குட்படுத்த வேண்டும்.

7. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வந்து ஏழெட்டு ஆண்டுகளாகியும் தென்னிந்தியாவில் 11-லட்சம் மருத்துவர்களுக்குப் பிரதிநிதியாக இதுவரை ஒருவரையாவது சட்டசபையில் நியமனம் செய்யாததினால் இனியாவது தமிழ் நாட்டுமருத்துவர்களில் ஒருவரை நியமனம் செய்யும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

8. தமிழ்நாட்டு நீதிமன்றங்களில் வழக்காளர்களிடம் வாக்குறுதி வாங்குங்கால் கிறிஸ்தவர்களுக்கும், முகமதியர்களுக்கும் முறையே பைபிளையும், குரானையும் கையில் கொடுப்பதைப்போல் தமிழர்களுக்குத் திருக்குறளைக் கையிற் கொடுத்துவிசாரிக்க வேண்டும்.

9. சென்னை சட்டசபையில் டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் கொண்டுவந்திருக்கும் தேவதாசி மசோதாவையும் சம்மத வயது மசோதாவையும் இச்சங்கம் ஆதரிக்கின்றது.

10. நியாயஸ்தலங்களிலும், பத்திரப்பதிவு இலாக்காக்களிலும் சென்சஸ் ரிபோர்ட்டிலும் மக்களை மதத்தின் பெயராலாவது பாஷைகளின் பெயராலாவது பதிவுசெய்யப்படவேண்டுமேயல்லாது ஜாதிப்பிரிவுகளை பதிவுசெய்யக்கூடாது.

11. ஆலயசுதந்தரம் தடுக்கப்பட்ட எல்லா இந்து வகுப்பினருக்கும் ஆலயப்பிரவேச உரிமையைக்காப்பாற்ற வாலிபர்கள் ஒன்றுசேர்ந்து சத்தியாக்கிரக முறையைக் கைக்கொள்ளவேண்டும் என இக்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகின்றார்கள்.

13. இந்திய மகாவீரர் இண்டஸ்ட்ரியல் கம்பெனியில் மருத்துவ வகுப்பினர் எல்லோரும் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும்.

14. மருத்துவன் பத்திரிகையை விரைவில் வெளியிட்டுச் செம்மையாய் நடைபெறுவதற்கு வேண்டிய உதவிபுரியும்படி மருத்துவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது. பின்னர் சங்கத்தின் நிருவாக உறுப்பினர்கள் நியமனஞ் செய்யப்பட்டது.

எம். டி. சுப்பிரமணிய முதலியாருக்கு அனுதாபம்

30-3-28ல் தென் இந்திய மருத்துவர் சங்க நிலையத்தில் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் ஒருகூட்டம் கூடிப் பிராமணரல்லாத தலைவர்களில் மிக ஊக்கமுற்ற ஒருவரும்

மதுரை மருத்துவர் சங்கத் தலைவருமாகிய மதுரை திரு எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் காலமானது குறித்து வருந்துவதாகத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பி. டி. ராஜன் எம்.எல்.ஸி. அவர்கட்கு அனுப்பப்பட்டது.

தலைவரின் படத்திறப்பு

21-4-28ல் சங்கநிலையத்தில் மருத்துவப் பெரியாராகிய சிறுத் தொண்டநாயனர் குருபூசை நடைபெற்றது. பின்னர் தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் தலைவரும், ஸ்தாபகருமாகிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் உருவப்படத்தைச் சங்கநிலையத்தில் திறந்துவைப்பதற்குமுன் வைத்திய சிரோமணி சி. மதுரைமுத்து முதலியார் அவர்கள் பண்டிட் ஆனந்தம் அவர்களின் அரிய உழைப்பைப்பற்றியும்பலர்சித்தவைத்தியம் ஒன்றுண்டென்பதை அறியாதகாலத்தில் கவர்மெண்டாரும் அதை ஒத்துக் கொண்டு அதற்காக இந்திய வைத்திய பாடசாலையில் தனிவகுப்பு வைத்து நடத்தும்படி செய்யப்பாடுபட்டதைப்பற்றியும் பிறகு தென் இந்திய மருத்துவர் சங்கத்திற்கு அவர் பாடுபட்டு வருவதைப்பற்றியும் எடுத்துக் கூறியபிறகு திறந்துவைத்தார். இசைப் புலவர் ஆர். வி. நாயுடு அவர்களால் இன்னிசைக் கருவிகள் வாசிக்கப்பட்டன. பண்டிட் ஆனந்தம் அவர்கள் சிறுத்தொண்டரைப் பற்றியும் குருபூசை இன்னதென்பதுபற்றியும் தெளிவாக எடுத்துக்கூறினர். பின்னர் மருத்துவகுல சிறுவர்சிறுமிகட்குப் புத்தகம், கற்பலகை, சிற்றுண்டி அளிக்கப்பட்டன.

திருவண்ணமலை ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு

23-5-28ல் சங்க நிலையத்தில் பண்டிட் ஆனந்தம் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடி ஜே. எஸ். கண்ணப்பர், திருவண்ணமலை ஆலயப் பிரவேச வழக்கில் வெற்றியடைந்ததைப்பற்றியும் சர் எம். கிருஷ்ணன் நாயர் அரசியல் சட்டமெம்பர் ஆனதைப் பற்றியும் இச்சங்கத்தினர் மகிழ்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சித்தவைத்திய பாடசாலையில் பாடபுத்தகங்கள் தொகுத்து எழுதும் கமிட்டிக்கும் அப்புத்தகங்களைப் பார்வை இட்டு ஒப்புக்கொள்ளும் கமிட்டிக்கும் சித்த வைத்தியத்தில் நன்கு பயிற்சியும் அனுபவமும் உள்ள சிலரைச் சிபார்ஸ் செய்யப்பட்டது. தென் இந்தியா முழுதுக்கும் சென்னையில் மட்டும் ஒரே சித்த வைத்திய வகுப்பு இருப்பது போதாதெனவும் தஞ்சை அல்லது திருச்சியில் இன்னொரு சித்தவைத்திய கலாசாலை ஏற்படுத்த வேண்டுமெனவுந் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு

22-6-28ல் சங்க நிலையத்தில் டாக்டர் சி. நடேச முதலியார் அவர்கள் அவைத்தலைமையில் ஒரு பொதுக்கூட்டம்கூடி ஜே. என். ராமநாதன் அவர்களின் திருச்சிமலைக் கோட்டை ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவளிக்கப்பட்டது.

இணக்கவயது கமிட்டிக்கு சாட்சியம்

10-8-28ல் இணக்க வயது கமிட்டியாரின் கேள்விகளுக்குத் தென் இந்திய மருத்துவர் சங்கத்தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்களால் சாட்சிகள் எழுதியனுப்பப்பட்டது. அதன் விபரம் மருத்துவன் இரண்டாவது இதழ் 49-வது பக்கத்தில் வெளியாயிருக்கின்றது. மற்றத் தமிழ் ஆங்கிலப்பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளது.

லஜபதிராய்க்கு அனுதாபம்

19-11-28ல் சங்க நிலையத்தில் லாலா லஜபதிராய் அவர்கள் காலமானதைக்குறித்து ஓர் இரங்கற்கூட்டம் பண்டிட் ஆனந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பனகால் அரசருக்கு அனுதாபம்

18-1-29ல் சங்கநிலையத்தில் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள் அவைத்தலைமையில் ஒரு கூட்டங்கூடி காலஞ்சென்ற பானகல் அரசரின் மரணத்தைக்குறித்து வருந்துவதாகவும், உத்தியோகங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அனுஷ்டித்துவருவதற்காகக் கனம் மந்திரி எஸ். முத்தையா முதலியாரைப்பாராட்டுவதாகவும், இந்துக்கள்யாவரும் இந்து ஆலயங்களுக்குள் சென்று தரிசனம்செய்ய உரிமையளிக்க வேண்டுமென்று திரு. கனகசபை நாடார் கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியில் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும், அறுப்புக்கோட்டைக்கடுத்த பாலையம்பட்டிக் கிராமத்தில் கோயிலில் மருத்துவர்களுக்கு வழக்கமாயிருந்த உரிமைகளைத் தடைசெய்தவர்களைக் கண்டிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

க்ஷவரத்தொழில் மறுப்பு

20-2-29ல் சங்க நிலையத்தில் திருநெல்வேலி ஜில்லா மருத்துவர் சங்கத்தலைவர் மு. குலசேகரம் பண்டிதர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டங்கூடி மருத்துவர்களில் க்ஷவரத்தொழிலைச் செய்பவர் அதனை விட்டுவிட வேண்டுமென்றும், இயலாதவர்கள் கவுரவமான முறையில் கடைகள்வைத்துச் செய்யவேண்டுமென்றும், 18 வயதிற்குட்பட்ட மருத்துவகுலமாணவர்களைக் கல்விகற்பதைத்தவிர வேறுதொழில் செய்ய விடக்கூடாதென்றும்,

சென்னையில் வந்திருக்கும் சைமன்கமிஷன்முன் நமது குறைகளைத் தெரிவிக்க அறிக்கை தயாரிக்கும்படி பண்டிட் ஆனந்தம் அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சைமன்கமிஷனுக்கு அறிக்கை

2-3-29ல் சென்னை மெஸானிக் லாட்ஜில் சர்ஜான் சைமன் முன்பாக பண்டிட் ஆனந்தம் அவர்கள் சங்க உறுப்பினர் சிலருடன்சென்று அவருக்கு ரோஜாமாலைசூட்டித் தென் இந்திய மருத்துவர்களைப்பற்றியும், இந்திய அரசியல் திட்டத்தைப்பற்றியும் எழுதிய அறிக்கையைக் (மெமோராண்டம்) கொடுத்தார். சர் ஜான் சைமன் அவர்கள் அறிக்கையை முற்றும் படித்துப்பார்த்து வேண்டியதைச் செய்வதாகவும், இவர்கள்செய்த மரியாதைகளை மறக்கமாட்டோமென்றும், இந்தியாவில் கஷ்டப்படுகிறவர்களுக்கு வேண்டியதைச் செய்வதற்காகத் தாங்கள் வந்திருப்பதாகவும் பதில் கூறினர். அவ்வறிக்கை சுய ஆட்சி ஸ்தாபனங்களில் மருத்துவர்களுக்குப் பிரதிநிதித்துவமில்லை, தனிப் பிரதிநிதித்துவம், நியமனமுறை, வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் நியமனமும்வேண்டும், மேஜர்களுக்கு ஓட்டுரிமை, மாகாண சுய ஆட்சி, மாகாணச் சட்டசபையில் இரண்டாவது சபை, மருத்துவரும் அரசாங்க உத்தியோகங்களும், இலவசக்கல்வி, வேலையில்லாக்கஷ்டம், கைத்தொழில் அபிவிருத்தி, அயல்நாடு செல்லுவோருக்குத்தொழில், சமூகமத விஷயங்கள், சமூகச் சீர்திருத்தத்திற்கு சர்க்கார் உதவி என்னும் பல அரிய விஷயங்கள் அறிக்கையிற்கண்டுள்ளன. இதன் முழுவிபரமும் மருத்துவன் 6-வது இதழ் 163-ம் பக்கத்திலும் மற்றப்பத்திரிகைகளிலும் வெளியாயிருக்கின்றன.

சங்கத்தலைவருக்கு உபசரணை

17-5-29ல் சென்னை ஆதியப்ப நாயகன்தெரு திருமணம் அண்ணாமலை முதலியார் ஹாலில் கனம் சுகாதாரமந்திரி எஸ். முத்தையா முதலியார் அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் கூட்டித் தென் இந்திய மருத்துவர்சங்கம் நிறுவியவரும், சங்கத்தலைவருமாகிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் சென்னை நகர பரிபாலனசபையில் நியமனம் பெற்றதுபற்றி அவருக்கு ஒரு உபசாரபத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அதுகாலை திருவாளர்கள் மணி. திருநாவுக்கரசு முதலியார், சுரேந்திரநாத் ஆரியா, ஜே. எஸ். கண்ணப்பர், திவான்பகதூர் கோபதி. நாராயணசாமி செட்டியார், எம். எஸ். கோடீசுவரன், ஜே. என். ராமநாதன், என். தண்டபாணி, பாலகுருசிவம், பண்டிதர் முனிசாமி பிள்ளை ஆகியவர்கள் பண்டிட் ஆனந்தம் அவர்களைவாழ்த்திப் பேசினர்கள்.

தென் இந்திய மருத்துவர் சங்கம், ஏழாவது ஆண்டின் வரவு செலவு கணக்கு.

1927-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ம்தேதி முதல் 1928-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம்தேதி முடிய.

வரவு	ரூ.	அ.	பை.	செலவு	ரூ.	அ.	பை.
சைமன் கமிஷன் வரவேற்புக்காக: திருநெல்வேலி மருத்துவர் சங்க வரவு	68	0	0	சைமன் கமிஷன் வரவேற்புக்கு	108	0	0
சைமன் கமிஷன் வரவேற்புக்காக: திருச்சி மருத்துவர் சங்க வரவு	10	0	0	தந்தி தபால் செலவு	19	5	0
சைமன் கமிஷன் வரவேற்புக்காக: வேலூர் மருத்துவர் சங்க வரவு	5	0	0	திராவிடன், ஜஸ்டிஸ், குடி அரசு, தமிழ் நாடு முதலிய பத்திரிகைகள் சந்தா	63	0	0
சிதம்பரம் S. தில்லைக்கண்ணு பண்டிதர் வரவு	4	0	0	சங்கநிலைய வாடகை	120	0	0
மருத்துவசங்கத் தலைவர் பண்டிட் S. S. ஆனந்தம் அவர்களிடம் கடன் வாங்கியது	858	0	6	காகிதம், அச்சுக்கூலி, டைப்புக்கூலி	21	2	6
				வண்டிச்செலவு	39	11	9
				மாணவன் G. அம்பலவாணனின் உணவுச்செலவு	120	0	0
				,, V. அருணகிரி	48	0	0
				,, D. சிவகுருநாதன்	96	0	0
				,, M. அருட்சோதி	120	0	0
				குமாஸ்தா சம்பளம்	120	0	0
				மானவர்களின் உடை, புத்தக செலவு	69	13	3
	945	0	6		945	0	6

தென் இந்திய மருத்துவர் சங்கம், எட்டாவது ஆண்டின் வரவு செலவு கணக்கு.

1928ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-தேதி முதல் 1929ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31ஆம் தேதி முடிய.

வரவு.	ரூ.	அ.	பை.	செலவு.	ரூ.	அ.	பை.
சீனிவாசன் வரவு	1	0	0	தந்தி, தபால் செலவு	19	12	0
சைதாபேட்டை M. சரவண பண்டிதர் வரவு	5	0	0	திராவிடன், ஜஸ்டிஸ், குடி அரசு முதலிய பத்திரிகைகள் சந்தா ...	39	0	0
மயிலை மருத்துவர் சங்க வரவு ...	5	0	0	சங்க நிலைய வாடகை	120	0	0
மருத்துவர் சங்கத்தலைவர் பண்டிட் S.S. ஆனந்தம் அவர்களிடம் கடன் வாங்கினது.	827	12	6	காகிதம், அச்சுக்கூலி, டைப்புக்கூலி ...	22	12	6
				வண்டிச் செலவு	37	0	6
				மாணவன் G. அம்பலவாணன் உணவுச் செலவு	120	0	0
				,, R. ராதா கிருஷ்ணன். ...	40	0	0
				,, N. ராமநாதன் ...	24	0	0
				,, A. ஷண்முகம் ...	20	0	0
				,, A. சுப்பிரமணியம் ...	20	0	0
				M. அருட்சோதி உணவுச் செலவு	120	0	0
				மாணவி கூடலூர் காமாட்சி ..	20	0	0
				மாணவர்களின் உடை, புத்தக முதலிய செலவு	76	3	6
				குமாஸ்தா சமபளம் ...	160	0	0
ஆகமொத்தம் ரூபா	838	12	6	ஆகமொத்தம் ரூபா ...	838	12	6

18-9-1921 தென் இந்திய மருத்துவர் சங்கம் நிறுவியது முதல் ஒவ்வொரு ஆண்டின் வரவு செலவு.

	வரவு			* கடன்			செலவு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை
முதல் ஆண்டு	573	9	8				477	8	8
இரண்டாம் ஆண்டு	449	8	6				545	9	6
மூன்ரும் ஆண்டு	596	10	6	46	11	0	643	5	6
நான்காம் ஆண்டு	170	0	6	152	2	0	322	2	6
ஐந்தாம் ஆண்டு	214	0	0	436	6	6	650	6	6
ஆரும் ஆண்டு	23	0	0	789	4	0	812	4	0
எழாம் ஆண்டு	87	0	0	858	0	6	945	0	6
எட்டாம் ஆண்டு	11	0	0	827	12	6	838	12	6
ஆக கூடுதல்	2124	13	2	3110	4	6	5235	1	8

* தென் இந்திய மருத்துவ சங்கத்தை நிறுவியவரும், தலைவருமான பண்டிட் S. S. ஆனந்தம் அவர்களிடம் கடனுக வாங்கிய மொத்தத் தொகை ரூ. 3110 4 6

கள்ளுண்பவர் நஞ்சுண்பவரே

தென்னை, பனை, ஈச்சை முதலிய மரங்கள் பக்குவப்பட்டபின் அவைகளில் பூம்பாளைகள்தோன்றி, அவை பூத்துக்காய்த்து மக்களுக்குப்பயனுள்ள பல இனியபொருள்களைத்தருகின்றன. அப்பூம்பாளைகள் பூத்துக் காய்க்குமுன் பாளைகளைக்கட்டி அறுத்துத்தட்டி அதில் வடியும்சாற்றை மண் குடுவைகளில் பிடித்து சேமித்துவைப்பதைத்தான் கள்ளென்கிருேம். அக்கள் கெட்ட மணமும், புளிப்புச்சுவையும், அறிவைமயக்கி உடம்பில் பலநோய்களை உண்டாக்கும் குணமுமுள்ளது.

மக்களிற் சிலர் தாம் வருந்தி உழைத்துத்தேடிய பொருளைக் கொடுத்து, இக்கள்ளைவாங்கிக் குடித்து வெறித்து உடன்பிறந்தோரும், மனையாளும், ஈன்றெடுத்த அன்னையும் வெறுத்தொதுக்

கும் தன்மையை அடைகின்றூர்கள். இவர்கள் சொல்லுக்கும் செயலுக்கும் சிறிதேனும் சம்பந்தமிருக்காது; நாணயமிருக்காது. இவர்களின் செயலனைத்தும் பிறர்பார்த்து வெறுக்கத்தக்கனவா யிருக்கும். ஆதலால், உலகினர் இக்குடியர்களை மிக மரியாதைக் குறைவாக நடத்துகிறூர்கள். "குடிகாரன் பேச்சு பொழுதுவிடிந் தால் போச்சு" என்னும் சாமானியப் பழமொழியொன்றும் வழங் குகிறதிலிருந்து குடிகாரர்கட்கு எவ்வளவு மரியாதை இருக்கிற தென்பது விளங்கும்.

குடியர்களின் வியாக்யானம்

கள்ளைக்குடித்து வெறித்து அறிவுமழுங்கிப் பலதுன்பங்கட்கு ஆளாகி வருந்துவோர் பலருக்கு கள் குடிக்கவேண்டாமென நாம் கூறினுல், அக்குடியர்கள், "கள் குடிப்பதில் என்ன தீமை யிருக்கிறது? தென்னையும், பனையும் கற்பகதருக்களுக்கு நிகராகும். அதிலுண்டாகிற இளநீரை எல்லோரும் பருகுவதில்லையா? நாங் கள் தென்னையில் தேங்காய் உண்டாகும் பாளையிலிருந்து வடியும் சாற்றைத்தானே குடிக்கிறோம். பனைமரத்திலுண்டாகும் பனங் காயையுண்பதற்குப் பதிலாக, பனையின் பாளையிலூறும் சாற் றைக்குடிக்கின்றோம். பனைமரத்தின் பாளையில் வடியும் சாற்றைப் பிடிக்க அதனில் கவிழ்த்துவைக்கும் மண் குடுவையினுள் சுண் ணும்பைத்தடவி, அச்சுண்ணம் தடவின குடுவையில் வடியுஞ் சாற்றைமட்டும், பனஞ்சாறு அல்லது பதினி எனக்கூறி எல்லோ ரும் குடிக்கவில்லையா? அச்சாற்றை பனைவட்டாகச் (வெல்லம்) செய்து எல்லோரும் உபயோகிக்கவில்லையா" என வினவு கின்றனர்.

நாம் கூறுவதென்னவெனில், தென்னை மரத்தைப் பயிர் செய்வது அதில் உண்டாகும் தெங்கிள நீரையும், தேங்காயின் பாலையும், நெய்யையும் உபயோகித்துப் பயனடைவதற்காகவே.

தெங்கிளநீரின் குணம்

இந்த தெங்கிளநீரை இளநீரென்றும் கூறுவதுண்டு. இவ் விளநீரைக் குடிப்பதால், எவ்வளவோ நற்குணங்களுண்டாகின் றன. இதனுல் பித்தம் தணிந்து, மனமும், அறிவும் பிரகாச மடைந்து தெளிவடைகிறதுடன் பலருக்கு இது நல்ல உணவாகவு மிருக்கிறது.

"இளநீர் குணமதனை இயம்பக்கேள் மாமயிலே
வளமான பித்தம்போம் வாந்திநிற்கும்—உளமகிழ
தீய அனல்தணிக்கும் தீபனமும் உண்டாகும்
தாது மிகவிர்த் திக்கும் தான்.

இளநீரால் வாதபித்தம் ஏகும் மனதுந்
தெளிவாய்த் துலங்கு இருதிருஷ்டிக்கு—ஒளியும்
குளிர்ச்சியு முண்டாம் கொடிய அனல்நீங்கும்
தளிர்த்தகன நொய் தாங்கும் சாற்று.

பச்சிளநீர் மேகம்பழஞ் சுரங்களைப் போக்கும்
கச்சு மூலை மாதே கபமறுக்கும்—மெச்ச
வயிற்றிற் கிருமியொடு வன்சொரிகண் தோஷம்
அயர்த்தோடச் செய்யு மறி.

"இளநீருக்கு பித்தம்போம், வாந்திநிற்கும், பழைய காய்ச்சல் நோய்கள்நீங்கும், பசி உண்டாகும், வாதபித்தம் கபம் தணியும், மனந் தெளிவடையும், கண்ணுக்கு ஒளி உண்டாகும், வயிற்றிலுள்ள கிருமிகள் கொல்லப்படும் தோலைப்பற்றியசொரிசிரங்குகள் போகும்"

என நமது மருத்துவ நூல்கள் இளநீருக்குள்ள இனியகுணங்களை எடுத்துக்கூறுகின்றன. இதனைநாம் அனுபவத்திலும் கண்டு வருகிறோம்.

தேங்காய்ப்பாலின் குணம்

தேங்காய்ப்பாலில் சிறிது உப்பும், சர்க்கரையும் சேர்த்து, சோற்றிலும், வேறு சிற்றுண்டிகளிலும், கஞ்சிகளிலும், பாயாசங்களிலும், சேர்த்துண்பதால் நாவிற்கு மிகுந்தசுவையும், உடல் வளர்ச்சியும் உண்டாகிறது. தேங்காயின்நெய்யும் நற்குணத்தில் குறைந்ததல்ல; தேங்காய்நெய் எவ்வளவோ பொருள்களாக மாற்றப்படுகிறது. தேங்காய் ஓடும், தேங்காய்நார்முதலியவைகளும் பலவிதத்தில் பயன்படுகின்றன. தென்னையில் உண்டாகும் இவ்வரும் பொருள்களை, கொடிய கள்ளிறக்குவதனால் நாம் இழந்துவிடுகிறோம். இவ்வளவு உயர்ந்தபொருள்களையும் இழந்து நஞ்சாகிய கள்ளையுண்டாக்கி அதைக்குடிப்பதால் மக்கள் அடையும் கதியைப்பற்றி சிறிது கூறுவோம்.

கட்குடியர்களின்போக்கு

கள் குடிப்பவர்கள், கள்ளைக்குடிப்பதால் கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலச்சூடு, மேகச்சூடு, உஷ்ணத்தினுலுண்டாகும் புகைச்சல், இருமல் இவைகள் நீங்குவதாகவும், உடல் மெலிந்தவர்கட்கு, உடல்பருப்பதாகவும் பொதுவாகக் கள்ளுக்கு நற்குணம் கற்பிக்கின்றனர். வேறுபலர் பகல்முழுவதும் வெய்யலில் உழைத்து அலுத்துப்போனவுடன் மாலையில் கள் குடியாவிட்டால் தமது உடம்பினயர்வு நீங்காதென்றும் மாலையில் கள் குடித்தாலன்றி மறுநாள் வேலைசெய்ய வியலாதென்றும் போலிக்

காரணங்கள் கூறுகின்றனர். இவைகள் உண்மையா என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

கள்ளின் குணம்

துஞ்சினர் செத்தாரின்வேறல்ல எஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண்பவர் —திருக்குறள்.

அறிவையழிக்கும் செயலழிக்கும் அழியாமானந் தனையழிக்கும்
செறியுமறிஞர் மதியாதசெருக்கை விளைக்கும் ஈன்றுளு
முறியும்வெறுப்பு மிகவிளைக்கு' முனிவுவிளைக்கும் பகையஞ்சா
குறிகள்விளைக்கும் நகைவிளைக்கும் கொள்ளேல் கள்ளுண்ணலை
மைந்தா

நாதவிந்தூறும் நளிர்பாண்டொடு சோகை
வாதபித்தங் கிராணி வன்கரப்பன்—பேதியிவை
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடும் மேகம்உண்டாம்
தெங்கின்மது விற்கென்றே செப்பு
—மருத்துவ நூல்

ஒரு மருத்துவர் விண்ணுற்ருர்

மருத்துவ வகுப்பினிற் பிறந்தவரும், தமிழ் மருத்துவத்தில் மிகத்திறமையுடையவரும், திருச்சி ஜில்லா மருத்துவர் சங்கத்திற்குத் தலைவராயிருந்தவரும், திராவிட வைத்திய மகாநாட்டில் மருத்துவ ஞாயிறு என்னும் பட்டம் பெற்றவரும், நமது அருமை நண்பருமாகிய, திருச்சிகோட்டை பே. பிச்சைமுத்து பண்டிதர் அவர்கள் 5-3-30-ல் காலமானதாய் அறிந்து மிக வருந்துகின்ரேம். இவர் திருச்சி ஜில்லாவில் மட்டுமன்றி சென்னையிலும் இவருடைய வைத்திய திறமையை சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னமே நாம் கண்டுள்ளோம். இவர் சில வைத்தியர்களைப் போல் பணம் சம்பாதிக்கும் முயற்சி ஒன்றையே கருதி விளம்பரங்களைச் செய்யவும் தன்னைப் பெருமைப்படுத்திக்கொள்ளவும், பொய்சொல்லவும் அறியார்; நட்பிற்குரியவர்; மனிதர்களிடத்தில் அன்புடையவர். இவர் பயங்கரமான நோய்களைக்கண்டு அஞ்சமாட்டார். சமயோசிதமாக நோய்க்குத்தக்க வைத்தியம் செய்வதில் நிகரில்லாதவர். இவருடைய மருத்துவ அறிவை அவர் சகோதரர்களிடத்திலும், அவர் மகனிடத்திலும் உலகம் எதிர்பார்க்கும்.

அவர் மரணத்தால் தமிழ் வைத்தியத்திற்கும்; மருத்துவ வகுப்பினருக்கும் ஒரு நஷ்டமென்றே சொல்லலாம். அவருடைய வைத்திய உதவியைப்பெற்ற திருச்சி ஜில்லா வாசிகளுக்கும், அவருடைய குடும்பத்தார்களுக்கும், அவரிடத்தில் நமக்குள்ள மரி

யாதையையும், அவருடைய மரணத்தால் நமக்குள்ள துயரத்தை யும் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

மதிப்புரை

தமிழரசு என்னும் வாரப்பத்திரிகை ஒன்று சென்னையினின் றும், ஆசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களைக் கொண்டு வெளியிடப்படுவதுகண்டு நாம் மகிழ்ச்சிப்பெருக்கெய்து கின்றோம். இப்பத்திரிகையின் கொள்கையும் போக்கும் ஏனை யச் சில பத்திரிகைகளைப் போலல்லாது அறிவுடைய நெறியில் இருப்பதைக்கண்டு யாரேதான் களிப்படைய மாட்டார்? சீர்திருத் தம் என்பது எல்லாத் துறைகளிலும் அவசியமென்பதும், அதில் முக்கியமாக நம் தென்னாட்டில் சமூக சீர்திருத்தமே முற்றிலும் வேண்டற்பாலதென்பதும் இச் சீர்திருத்தத்தை மக்களிடைப் புகட்டவேண்டிய வழியிலேயன்றி பொருந்தாத முறைகளில் கையாடுதல் பயன்தராதொழிவதோடு சிலகால் ஆபத்தும்விளையும் என்றும் நம் நேயர்கள் அறிவார்கள். அந்தந்த நாட்டுக்கும் அந் தந்த மக்கட்கும் ஏற்றபடித்தாகவே சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டும். ஒரு சிறு குழந்தை கையில் கூறிய வாளையெடுத்துக் கொண்டு அதனால் தனக்கு நேரிடக்கூடும் ஆபத்தை அறியாமல் மகிழ்ச்சியாய் விளையாடிக்கொண்டிருக்குமாயின், அவ்வாளை முறட்டுத்தனமாகப் பிடுங்குவதால் அக்குழந்தை அலரி அழத் தொடங்குமல்லாது சமாதானமாகாது. அவ்வாறின்றி, அக்குழந் தையின் கண்முன் ஆபத்தை விளைக்காத ஒரு புதிய அழகிய விசித்திரப் பொம்மையைக்காட்டினால் எவ்வாறு அக்குழந்தை தானாகவே கையில் உள்ளவாளை நழுவவிட்டு புதிய அப்பொருளைக் கைப்பற்றுமோ அவ்வாறாகவேதான் மூடக்கொள்கைகளையும், கொடிய பழக்கங்களையும் பாமர மக்களிடையிருந்து அகற்றவேண் டுமாயின் மானைக்காட்டி மானையும், யானையைக்காட்டி யானையை யும் பிடிக்கும் உபாயம்போல் அதற்குரிய உபாயத்துடன் செல்ல வேண்டும் என்பது எமது துணிபு.

இவ்வுபாயத்தை இத்தமிழரசு முற்கொண்டு, நம் தென்னாட் டில் உள்ள சாதிக்கொடுமை மதக்கொடுமை மூடப்பழக்க வழக் கங்கள் இவைகளைத் தகர்த்தெறிந்து மெய்ஞ்ஞானம் ஊட்ட முன் வந்திருக்கின்றது. இதனை இனி நமது நேயர்கள் அனைவரும் ஆதரித்தல்வேண்டும் என்பது நம் பேர்வாவாகும்.

பொதுநோக்க முடையவரும் உண்மையை வெளியிடப் பின்னடையாதவரும் கல்வி அறிவில் முதிர்ந்தவருமாகிய ஆசிரியர் களைக்கொண்டு நேரிய முறையில் வெளியிடப்படும் இத்தமிழரசு நீடூழி வாழ்வதாக. இதன் ஆண்டு கட்டணம் மூன்று ரூபாதான்.

(பத்திராதிபர்)

எவ்வளவு சிறிய வீடாயினும் குளிப்பதற்கு ஒரு சிறு அறையும், கக்கூசும் இல்லாவிடில் அது வீடாகாது.

முழுகவேண்டிய விதம் :—உடுப்புகளை எல்லாங் களைந்துவிட்டு முதலில் தலையை நனைத்து பிறகு உடம்பில் நீர்விடவேண்டும். தலையில் நீர் படுகிறதற்குமுன் உடம்பில் நீர் படக்கூடாது. இல்லையேல் சிரசுக்கு இரத்த ஓட்டம் மிகுதிப்பட்டு முழுக்கின் பயன் இல்லாமற் போகும். பிறகு கம்பளித்துணியை நனைத்துப் பிழிந்து அதனால் உடம்பு முழுவதும் நன்றாய்த் தேய்க்கவேண்டும். அக்குள், கைகால்களின் மடிப்புகள், சந்து விரல்களினிடைச்சந்து இவைகளைச் செம்மையாகத் தேய்த்துக் கழுவவேண்டும். பிறகு சோப்புத்தேய்த்து நீர்விட்டுக்கொண்டு கூடுமானால் தொட்டிக்குள்ளிரங்கி முழுகிக் குவளையினாலாவது, செம்பினாலாவது நீரை முகந்து தலைமேல் வார்க்கவேண்டும். இவ்விதமாக முழுகினபின் முதலில் மெல்லிய துவாலையால் உடம்பெல்லாந்துடைத்து, அப்புறம் முரட்டுத்துவாலையால் துடைக்கவேண்டும். இப்படி முழுகுங்காலம் சுமார் கால்மணிக்கு அதிகப்படக்கூடாது. அதற்குள் எல்லாவேலையுமுடிந்து உடுத்திக்கொள்ளத் தயாராக வேண்டும்.

பல் விளக்கல் :—குழந்தைகளுக்குப் பற்கள் முற்றும் முளைத்த பிறகு தினம் முழுகும்போதெல்லாம் அதிகாலையில் பற்களைச் சுத்திசெய்து வரவேண்டும். துவரான தூளினால் பல் விளக்குவதுதான் நலம். இதைவிட்டுச் சாம்பல், செங்கல் தூள், மணல், கடினமான குச்சு முதலியவைகளினால் பல் விளக்கினால் சீக்கிரம் பற்கள் தேய்ந்து அழிவுண்டாகும். பல்லீறுகளிலுங் காயமாகி இரத்தம்வரும். இதனால், வாயில் கெட்ட நாற்றமுண்டாகும். நல்ல பற்பொடிகள் கிடையாத காலத்தில் நன்றாக வெந்த கரியை நன்றாயரைத்து மிருதுவான தூளாக்கித் தேய்க்கலாம். இதைப்பற்றிய மற்றவிவரங்கள் பின்னாற் சொல்லப்படும்.

நீரில் நீந்துதல்:—நீந்தி முழுகுவது தேகத்துக்கு இருவகையில் அதிக குணம். தலைமுழுகுவதுடன் உடற்பழக்கமுமாகின்றது. மற்றெவ்வித உடற்பழக்கங்களிலும் அசைவு கொடாத சிலபாகங்கள் நீந்தும்போது அசைவுகொடுத்து உடல் உறுதிப்படும்; நெஞ்சு விரியும்; நுரையீரல் பலப்படும்; உடல் வடிவு செம்மையாகும்; இரத்த ஓட்டஞ் சீராகும்; மகிழ்ச்சியும் நெஞ்சில் உறமுமுண்டாகும். நீந்திமுழுகுவதனால் பலவகை லாபமுண்டு. தனக்குமட்டுமல்ல, பிறருக்கும் ஆபத்துச்சமயங்களில் மிக உதவியாயிருக்கும். இரண்டு தடவை கடலில் அழுந்தி இறக்கும்படியான ஆபத்திலிருந்தவர்களைத் தானே நீந்திப்போய் தப்புவித்த ஸ்பானியாதேசத்து அரசிக்கு இரண்டு மெடல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆதலால் ஏழை, செல்வர், ஆண், பெண் எவராயிருப்பினுஞ்சிறுவ ராயிருக்கும்போதே நீரில் நீந்தக்கற்றுக்கொள்ளவேண்டும். சமயம் நேரிடும்போதெல்லாங் குளத்திலும், ஆற்றிலும், கடலிலும், நீந்தி முழுகலாம். மலையாளத்தில் பெண்கள் குளங்களில் நீராடும் போது நன்றாக நீந்தி விளையாடுகின்றார்கள். ஆனால், மிக ஆழமான குளங்களிலும், ஏரிகளிலும், கடல்களிலும், மிக ஆழமும் வேகமுமுடைய ஆறுகளிலும் நெடுந்தூரம் நீந்திச்செல்லுவது கூடாது.

கடல் முழுக்கு :—இது ஒரு மருந்துபோல உடம்பிற்கு நலத்தைக்கொடுக்கின்றது. மெலிந்து பலவீனமாயிருக்கும் குழந்தைகளை வாரத்திற்கு இரண்டு மூன்று முறை கடலில் முழுக்காட்டி வந்தால் விரைவில் உடல்தேறி நல்ல சுகமுண்டாகும். கடல் நீரும், கடல் காற்றும் உடம்பிற்கு மேனியும், தலை மயிருக்குப் பலமுங்கொடுக்கும். உவர் நீரைப்போல் தலைமயிர் கழியும்படிச்செய்யாது. ஆனால், மழைகாலங் குளிர்காலங்களில் சமுத்திரத்தில் முழுகுவது நல்லதல்ல. சென்னையைப்போன்ற கடற்கரை ஓரத்திலுள்ளவர்கள் கடலில் முழுகுவதற்குத் தக்கபடி ஆபத்து விளையாமற் முழுகும் துறை ஏற்படுத்துவது அவசியமாகும்.

முழுகுவதைப்பற்றி பொதுக்குறிப்புகள்:—உண்டபின் முழுகக் கூடாது. மிக்க களைப்பாயிருக்கும் போதும், வியர்த்து உடல் குளிர்ந்துவருஞ்சமயத்திலும், எக்காரணத்தைக்கொண்டும் முழுகக்கூடாது. முழுகும் முன்னும், முழுகின பின்னும் தண்ணீர்க் கரையில் வீணாய்க் குளிரிலிருக்கக் கூடாது. தண்ணீரிற் கால்மணி நேரத்திற்கு அதிமாக இருக்கக்கூடாது. குளிர் சிறிது தாக்கினால் உடனே நீரினின்று வெளியேறவேண்டும். குளிர்ந்த காற்றடிக்கும்போது அதற்கு நேரேயிருந்து முழுகக்கூடாது. அடிக்கடி மயக்கம், சோர்வு உண்டாகிறவர்களும், குலைநோயுள்ளவர்களும் மருத்துவருடைய அநுமதியின்றி முழுகக்கூடாது முழுகினவுடனே உடம்பில் ஒரு வகை சூடும் எழுச்சியு முண்டானால் முழுக்கினால் நலம் உண்டானது என்றறியலாம். நடுக்கமுண்டானால் அது உடல் நலமின்மையைக் காட்டுங்குறி. அப்படிக் குளிருண்டானால் உடனே சூடான மிளகு நீர், காப்பி நீரில் சிறிது தேன் கலந்து கொஞ்சஞ் சாப்பிடுவது நலம். உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ள முயன்றால் உடுத்தியிருக்கும் உடைகளையும் உடம்பைப்போலவே சுத்தமாக வைத்துக்கொள்ளும்படியான வழக்குமுண்டாகும். இதனால் மனமும் மகிழ்ச்சியாக இருக்கும்.

தலை மயிர்:—தலை முழுகின பிறகு மயிரிலுள்ள ஈரத்தை நன்றாய்த்துடைத்துக் காயும்படிச் செய்யாவிட்டால் நீர்க்கோர்வைக் கிடமாகும். அன்றித் தலை மயிரிலுள்ள எண்ணெயும் நீருஞ் சேர்ந்து பிசுபிசுப்புண்டாகும். அதில் அழுக்கு இலேசாகச்சேர்

ந்து துர்நாற்றத்திற்கும் பேன்களுக்கும் இடமாகும். குழந்தைகளின் தலைமயிருக்குப் பதமிட விளக்கெண்ணெய்தான் நல்லது. வழிந்தோடும்படி தேய்க்காமல் மயிருக்குச்சிறிது பதமும் மினுமினுப்புமுண்டாகமட்டும் தடவி வரவேண்டும். தலைமயிரில் சிக்கெடுப்பதற்காக முரட்டுச்சீப்புகளால் தலை சீவக்கூடாது. அதனால் தலையில் செதிளுண்டாகும். பெரிய குழந்தைகளுக்குத் தேங்காயெண்ணெய், அல்லது நல்லெண்ணெய்த் தேய்க்கலாம். எண்ணெயைக்கொஞ்சமாகவே உபயோகிக்கவேண்டும். மயிரில் இயற்கையாக ஒருவித நெய்ப்பசை உண்டாகுகின்றது. இதைப் போலொத்த நெய்ப்பசை நீரில் நீந்திவாழும் பறவைகளிடம் மிகுதியாய்க் காணலாம். இதனால் வாத்து முதலிய நீர்ப்பறவைகளின் இறகுகள் நீரில் நனைகிறதில்லை. மயிருக்கு எண்ணெய்ப்பதமிட வேண்டுமானால், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய்களில் ஏதேனும் ஒன்றை உபயோகிக்கலாம். இந்தியா சூடான நாடானதால் சீக்கிரந்தோல் உலர்ந்துபோகும். மயிர் உதிர்கிறதாயிருந்தாலும், அல்லது செவ்வையாக வளராவிட்டாலும், நுனியிலிருந்து ஓர் அங்குலம்விட்டுக் கத்தரித்துவிட்டால் மயிர் நன்றாய் வளரும்; மயிர் உதிரவுமாட்டாது. தற்காலம் கடைகளில் விற்பனையாகிவரும் கூந்தல் எண்ணெய் (ஹேராயில்) முதலியவைகளை உபயோகிப்பது வீண். இவைகளால் தலைக்கும் மயிருக்குந் தீமையேயன்றி நன்மை இல்லை. தூசியும் அழுக்கும் மயிரில் நன்றாய்ச்சேரும். அடிக்கடி சீயக்காயாவது சோப்பாவது தேய்த்துச் சுத்திசெய்விக்கும்படி நேரிடும். தலைமயிரின் நுனி வெடித்து இருபிரிவாக இருக்குமானால் மயிர் வளரமாட்டாது. இதற்குமுன் சொல்லியபடி மயிரின் முனையை வெட்டிவிடுவது தான் நல்லது. வாசனை எண்ணெய்களால் மயிர் நீளமாய் வளரமாட்டாது. நரை மாறுமென்று நம்புவதும் வீண். பிழைப்பிற்கென்று இந்த போலி எண்ணெய்களைச்செய்து விற்கின்றார்கள். இந்த எண்ணெய்களில் பச்சிலை மூலிகைகளாவது மற்ற மருந்துப் பொருள்களாவது சேர்த்துக் காய்ச்சுவது கிடையாது. மண்ணெண்ணெயில் மணத்தை எடுத்து வியாபாரத்திற்கு அனுப்புகின்றார்கள். பெரும்பாலோர், அந்த எண்ணெயில் கண்ணுக்குப் பகட்டான நிறத்தையும் நல்ல செண்ட் (மணத்தையும்) சேர்த்து அழகான விலாசச்சீட்டுகள் ஒட்டிய அழகான கண்ணாடிக்குப்பிகளைப்பார்த்து மக்கள் ஏமாந்து வாங்குகின்றார்கள். இதன் குணம் மண்ணெண்ணெய்க்கு என்ன குணமோ அதேகுணந்தான். தலையில் பேன் உண்டாகாது. எண்ணெய் தெளிவாயிருப்பதால் சிக்குபிடியாது. இதைத்தவிர மயிர் மிக நீளமாக வளருமென்றும், நரை மாறுமென்றும் கண்ணுக்கும் மூளைக்கும் குளிர்ச்சி தருகிறதென்றும் வீணாய் மனிதர்கள் வாங்கி மோசம் போகின்றார்கள்.

குழந்தைகளுக்கு வாரத்திற்கிருமுறையாவது, எண்ணெய் முழுக்காட்டி தலைக்குச் சீயக்காய், இலுப்பைப்பிண்ணாக்கு முதலியவைகளை இடித்தபொடியை சோற்றுக் கஞ்சிநீரில் வேகவைத்துத் தேய்த்து முழுக்காட்டவேண்டும். நாள்தோறும் தலைமயிரைச்சீவி முடிந்துவிடவேண்டும். பலர் குழந்தைகளின் தலைமயிரைச் சாமிக்கு விட்டதாகச்சொல்லி மயிரைச்சிக்கெடுத்து சீவாமல் விட்டு விடுவார்கள். குழந்தைக்கு மயிரில் அழுக்கடைந்தால் மயிர் நிறையப் பேன் உண்டாகி தினவெடுத்து அக்குழந்தை தலையை ஓயாது சொரிந்து அதனால் பொடிப்பென்று சொல்லப்படும் ஒருவகைப் புண்ணும், அவைகளில் கடைசியில் புழுக்களும் உற்பத்தியாவதுண்டு. இதனால்குழந்தைகளுக்கு அதிகவருத்தமுண்டாகும். பெற்றோர்களின் அறியாமையும் மூடப்பழக்கங்களும் குழந்தைகளுக்கு ஆபத்தாய் முடிகின்றது. பெண்களுக்குக் கூந்தல் அழகு முதன்மையானதென்று சொல்லத்தகும். ஆகையால், அதைச்செவ்வையாக வைத்திருக்கவேண்டும். தலைமயிர் பேனின் தொல்லை அதிகமாயிருந்தால் அரைக்காற்படி தேங்காயெண்ணெயில் ஐந்து ரூபாயெடை கற்பூரத்தையும் ஒரு நெல் எடை சவ்வீரத்தையும் சேர்த்தரைத்துக் குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு தலை மயிருக்கும், தலைக்கும் நன்றாய் வகுந்துவகுந்து தேய்த்துவந்தால் சீக்கிரத்தில் பேன் செத்துப்போகும். தலையின் வியர்வையுடன் அழுக்குச் சேர்ந்து பேன் உற்பத்தியாகின்றது. பேனும், மூட்டைப்பூச்சியும் வியர்வையும் அழுக்கும் கலந்து உண்டாகின்றது. சுத்தமில்லாதவர்களால் பேனும் முகட்டுப்பூச்சியும் உண்டாக்கப்படுகிறது. அவைகளைப் படைக்கின்றவர்கள் நாமே. ஒவ்வொருவரும் அறிவுடன் சுத்தத்துடன் கவனித்தால் பேன் முகட்டுப்பூச்சி இல்லாமற் செய்யலாம்.

---

16. அத்தியாயம்.

உடை:—நம் நாட்டுப்பெண்களிற் சிலர், பட்டணங்களில் வசிப்போரும், பாடசாலைகளில் படித்து அறிவிலும் நாகரீகத்திலும் சற்றுத்தேறினவர்களுந் தான் தங்கள் குழந்தைகளுக்கு உடுப்புகள் உடுத்தி வருகின்றார்கள். மற்றவர்கள் குழந்தைகளை நாலைந்து வயதாகும் வரை உடுப்பின்றி நிருவாணமாகவே விட்டு விடுகின்றார்கள். இதனால் இளமையிலேயே கற்றுக் கொள்ள வேண்டிய வெட்கம், மானம் முதலியவைகளுக்குக் குறைவுநேரிடும். மண்ணும் தூசியும் மேலேபடியும். குளிர் காற்று உடம்பில் வீசுவதனால் நீர்க்கோர்வையும், மூக்கிற் சளிவடிதலும், சில சமயங்களில் நுரையீரல், குடல் ஆகிய உறுப்புகளில் அழற்சியுங்கண்டு சுரம், இருமல் முதலிய நோய்களுண்டாகும்.

அப்போது தாய்மார் மிக வருத்தத்தோடு மருத்துவரைத்தேடு வதும், மருந்துகொடுப்பதும், பணச்செலவு செய்வதும் வழக்கம். குழந்தைகளின் உடைவிஷயத்திலும் சிறிது கவனித்து வந்தால் இத்துன்பங்கள் நேரிடாது.

குழந்தைகளுக்கு உடுப்புகள் செய்வதற்கான துணிவகைகள்:- ஏழைகளும் எளிதாகத் தங்கள் குழந்தைகட்குத் தகுந்த உடுப்பு கள்செய்து உடுக்கத்தக்கதாக விலை மலிவான துணிகள் இப்போது நாடெங்கும் விற்பனையாகி வருகின்றது. உயர்ந்தவகைத் துணிக ளால் செய்த உடுப்புகள்தான் உடுத்தவேண்டுமென்பது கட் டாயமில்லை. துணியின் நிறத்திலும் அழகிலும் ஒன்றுமில்லை. உடல் நலத்துக்கடுத்த துணி எதுவோ அதுதான் வேண் டும். பொம்மைகளைச் சிங்காரிப்பதுபோல் குழந்தைகளைச் சிங் காரிக்கவேண்டியதில்லை. குளிரினாலும் வெப்பத்தினாலும் உடம் பிற்கு நோய் நேரிடாமல் காப்பாற்ற வேண்டியதற்காகத்தான் உடைகள் உடுத்துவது. ஆதலால் அவரவர் சக்திக்குத்தக்கவாறு குழந்தைகட்கு உடைகள் செய்து உடுத்துவிக்கவேண்டும்.

உடை வகைகள்:—ஆண் குழந்தைகளுக்குக் காற் சட்டை, அரைச் சட்டையும், பெண் குழந்தைகளுக்குப் பவாடையும், குடுத்தாவும் போதுமான உடுப்புகள். காற் சட்டைக்குப்பதில் சிறு துண்டும் பாவாடைக்குப்பதில் சிற்றாடையும் உடுத்தலாம். ஆனால், இனி தானே உடுத்திக்கொள்ளப் பழகுங் குழந்தைகளான தால், அடிக்கடி அவிழ்ந்துபோகும் உடைகளைத் திரும்பத் திரும் பக் கட்டிக்கொள்ள வருத்தப்பட்டுப் புறத்தே எறிந்து விட்டு விளை யாட்டிற் கருத்தாயிருக்கும். ஆதலால், செவ்வையாக உடுத்துக் கொள்ள சக்திவருமட்டும் காற்சட்டையும் பாவாடையுமே உடுத்திவருவது நலம். காற் சட்டை தாராளமாக விட்டுத் தைத் திருந்தால் நல்லது. மேலும் நாடாவினால் கட்டுவதைவிடப் பொத்தான் அல்லது கொக்கி போடுவதாயிருந்தால் மலஜலங் கழிக்கவேண்டிய காலங்களில் குழந்தை தானே எளிதில் கழற்றிக் கொள்ளக்கூடியதாயிருக்கும். நாடா முடிப்புச் சிக்கிக்கொள்ளக் கூடியதால் குழந்தைகளுக்கு வருத்தத்திற்கு இடமுண்டாகும். பாவாடையும் சட்டையும் குழந்தைகளுக்கு உடுத்தினால் ஓடி ஆடி விளையாட நலமாயிருக்கும். காற்று நன்றாய் உட்செல்வதால் உடம்பில் புழுக்கமிராது. ஆண், பெண் இருவகைக் குழந்தை களுக்கும் 13, 14 வயது வரை இவ்வுடைகளே போட்டு வரலாம். பெண் குழந்தைகளுக்கு மேல் சட்டையும் இடையிற் கட்டும் பாவாடையும் ஒன்றாகச்சேர்த்து தைத்து (கெவுன்) போடுவது நலம். இரவிக்கையைவிட இவ்விதத் தளர்ச்சியான சட்டையே நல் லது. பட்டணவாசிகளில் சிலபேர் இப்போது இதை அனுசரித்

துவருகின்றூர்கள். ஆனால், எல்லோரும் அப்படியே உபயோகித்துவருவது மிக நல்லது. வளரும் பிள்ளைகளுக்குக் கச்சை கொண்டிறுக்குவதுபோல் நெஞ்சையிறுக்கிக் கட்டுவது மிகக் கெடுதி. மேல்நாட்டு ஐரோப்பியப் பெண்களும் இப்படி அழகிற்கென்று இடுப்பிற் கச்சைகளை இறுகக்கட்டி இடையைச் சிறுகச்செய்துவந்தார்கள். ஆனால், அவர்களிற் பெரும்பான்மையோருக்கு அடிக்கடியுண்டாகிய பல வியாதிகளுக்கு இதுதான் முக்கிய காரணமென்று மருத்துவர்கள் தெரிந்து வெளியிட்ட பின் இந்தக்கெட்ட வழக்கத்தை விட்டு ஒழித்தார்கள். இரவிக்கையைப்போட்டு இறுகக்கட்டுவதனாலு மிப்படியே பலவிதமான வியாதிகளுக்கிடமாகின்றது. இரவிக்கையினாலிறுக்கப்படும் பாகமாகிய மார்புக்குள், இரத்தப்பை, நுரையீரல், ஈரல், மண்ணீரல் ஆகிய உயிர்நிலை உறுப்புகளிருக்கின்றன. நாம் சுவாசிக்கும் காற்றை உட்கொண்டவுடனே அது நுரையீரலெங்குஞ் சென்று அதனுள்ளிருக்கும் குழாய்களை நிரப்புவதினால் நுரையீரல் விம்மி விரியும். இவ்வாறு அது போதுமானபடி விரியத்தக்கதாக நெஞ்சும்மலர்ந்து கொடுக்கும். ஆனால், இரவிக்கையைப்போட்டு இருகக் கட்டியிருந்தால் இரவிக்கை எவ்வளவு இடங்கொடுக்குமோ அவ்வளவு தான் நெஞ்சும் மலரும். நெஞ்சு எவ்வளவு மலர்ந்து குவியுமோ, அவ்வளவுதான் நுரையீரலும் காற்றை உட்கொள்ளும். நுரையீரல் எவ்வளவு காற்றை உட்கொள்ளுகின்றதோ, அதற்குத்தக்கதாகத்தான் இரத்தஞ் சுத்தியாகும். ஆதலால் போதுமானகாற்று உட்கொள்ள இடமில்லாவிடில் இரத்தச்சுத்திக் குறைவாகும். செம்மையாய்ச் சுத்திசெய்யப்படாத இரத்தம் உடம்பெங்கும், பரவுவதால் உடம்பிலுள்ள உறுப்புகளின் வேலையும் குறையும்; நோய்க்கிடமாகும். பல பெண்களுக்கு மயக்கம், மார் நோய், வலிப்பு அடிக்கடி காண்பதுண்டு. அதற்கு முக்கிய காரணங்களில் இரவிக்கையை இருக்கிக்கட்டுவதும் ஒன்றாகும். மார்பில் இரவிக்கையை இறுக்கிமுடிவதால் நுரையீரலுக்கு எப்படித் துன்பமுண்டாகின்றதோ, அப்படியே இடது மார்புக்கு நேர் உள்ளிருக்கும் இரத்தப்பைக்கும் வருத்தமுண்டாகின்றது. இதனால் இரத்தப்பை ஒழுங்காக விரிந்து சுருங்கமுடியாது. இரத்தநரம்புகளில் (நாடிகளில்) இரத்தத்தைச் செலுத்துவதற்காக இரத்தாசயம் மிக வலிவுடன் வேலை செய்ய நேரிடும். அதனால் குலைநோய்கள் உற்பத்தியாகி அகால மரணத்திற்கும், அல்லது வேறு வருத்தமான நோய்களுக்கு மிடமாகும். ஈரல்கள் நெருங்கப்படுவதினால் ஜீரணசக்தி குறைந்து மலச்சிக்கல், உணவுக்குறைவு, பலவீனமுதலிய துன்பங்கள் நேரிடும். இவ்வகையாக அனேக துன்பங்களுக்கு இரவிக்கை காரணமாகின்றது. இரவிக்கை யணிந்துவரும் வரையிலுள்ள ஆயுள்நாட்களில் பத்துவருஷத்தை இழந்து விடு

கிறதானுல் உன்மார்பை மிக அழகாக இருக்கச்செய்கின்றேன், என்ன சொல்லுகின்ருய்? என்று ஒரு பெண்ணைக்கேட்டால் அதற்கவள் சம்மதிக்கமாட்டாள். ஆகையினுலே இவ்வித தீமை களுக்குக் காரணமாகிய இரவிக்கையை இடுப்புவரையில் வரும்படி தளர்ச்சியாகத் தைத்து போட்டுக்கொள்ளவேண்டும். பாதி உடம் பைமட்டும் மறைத்துப் பாதி உடம்பைத் திறந்துவைப்பதால் நல மில்லை. உடம்புமுழுவதையும் மூடுவதேநல்லது. ஆதலால் பெண் களுக்கு மெல்லிய சட்டைதான் நல்லது. சில பெண்கள் தும்மி ஞல் அவர்கள் போட்டிருக்கும் இரவிக்கை விட்டுவிட்டு நீளமாய்க் கிழிந்துபோகத்தக்க அவ்வளவு இறுக்கமாகக் கட்டியிருப்ப துண்டு. ரவிக்கைக்கட்டை அவிழ்த்தால் அந்தக்கட்டுக்குச்சரியாக உடம்பைச்சுற்றி வெளுப்பாக இருக்கும். அந்த இடத்தில் தோலில் இரத்தமில்லை. இப்படிக் கட்டுவதினுல் மேலேசொன்ன கெடுதிகளெல்லாம் உண்டாகும். சிறு வயதிலேயே இவ்விதக் கெட்டவழக்கத்தை நிறுத்திவிடவேண்டும்.

உடைகளின் மாதிரி:—பார்வைக்கு அழகாக இருக்கும் பொருட்டுக் குழந்தைகளுக்கு உடுத்துஞ் சொக்காய்களை வெட்டு வகைகளால் இறுக்கமாயும் மிகக் கோணலாயுஞ் செய்வதுண்டு. இது பிழை. உடம்பும், உறுப்புகளும் பலவிதமாக அசைகிறதற்கும் வளைகிறதற்கும் போதுமான விசாலமிருக்கவேண்டுமே யொழிய அழகைக் கவனிக்கக்கூடாது. சட்டையை எளிதில் போட்டுக் கழற்றக்கூடியவிதமாயு மிருக்கவேண்டும். பல நிற ஆடைகள் நல் லதே ஆயினும் கருப்புநிறங் கூடாது; வெள்ளைநிறமே நலம். ஆனல், நிறத்தைமாத்திரங்கவனியாமல், முதலில் பயனைக் கவனிக் கவேண்டும்.

உடைகளின் சுத்தம்:—சிலர் ஒருதடவை உடுத்தும் உடையை அது எவ்வளவு அழுக்காகக்கூடுமோ அவ்வளவு அழுக்காகுமட் டும் மாற்ருமல் உடுத்தியிருந்து பிறகு அதில் அழுக்கேற இட மில்லை என்று கண்டபின் மிக வருத்தத்தோடு வண்ணனிடஞ் சலவைக்குப் போடுவதுண்டு. இப்படி அழுக்கு உடைகளைக் கட்டியிருப்பவர்களின் அருகில் போனுல் சகிக்கக்கூடாத கெட்ட நாற்றம் அவர்கள் உடையிலிருந்து வீசும். சிலைப்பேனும் உண் டாகும். இவர்களுக்கு நோய்கள் வருவது ஆச்சரியமல்ல. இவர் களுக்குத்தான் வாந்திபேதி, வைசூரி முதலிய கொடிய தொற்று நோய்கள் எளிதில் சேரும். இவர்கள் கெடுவதோடு மற்றவர்களை யும் கெடுக்கின்ருர்கள். ஜன நெருக்கமான நகரங்களில் வாடகை வண்டிகள், மாட்டுவண்டிகள், குதிரைவண்டிகள், டிராம்வண்டி கள், மோட்டார்பஸ் முதலியவைகளில் அவர்களின் பக்கத்

தில் உட்கார்ந்து அனுபவித்தால் அதன் அருமைதெரியும். உடைகளில் எவ்வளவு சுத்தமற்றவர்களாயிருக்கின்றார்களோ அப்படியே மற்ற செய்கைகளிலும் தூய்மையற்றவர்களாயிருப்பார்கள். அழுக்குள்ள இடங்களில் எப்படி விஷஜெந்துக்கள்குடியிருக்கின்றதோ அப்படியே கொடியவியாதிகளும் அசுத்தமான நடவடிக்கையுள்ளவர்களிடத்தில் உண்டாகின்றது. மிகவும் அழுக்கேறிய உடைகளைச் செவ்வையாக வெளுக்கவேண்டிச் சலவை செய்பவரும் தன்னாலியன்றமட்டும் கல்லில் அடிக்கும்படி நேரிடுகின்றது. அதனால் துணி சீக்கிரம் நைந்து கிழிந்துபோகும். குழந்தைகளின் விளையாட்டுத் தன்மையால் விரைவில் உடுப்புகள் அழுக்காகும். ஆகையினால் அடிக்கடி அவைகளை மாற்றிச் சுத்தமான உடுப்புகளை உடுத்திவரவேண்டும். இதனால், இளமைப்பருவத்திலேயே உடை சுத்தமாயிருக்கவேண்டுமென்னும் அறிவுண்டாக வழியாகும்.

அரைக்கச்சை:—காற்சட்டைக்கு இடுப்பில் யாதொரு பிடிப்பில்லாதபடியால் அடிக்கடிநழுவிப்போகும். இதற்கு ரப்பர்சேர்ந்து பின்னப்பட்டுக் கடைகளில் விற்கப்படும் இடைக்கச்சைகளை வாங்கிக் கட்டிவரலாம். இது உடுப்பை நழுவாமல் உடம்புடன் சேர்த்துப்பிடிப்பதோடு தேகத்தின் அசைவிற்குத்தக்கமாதிரி இசைந்து நெகிழ்ந்து சுருங்கும். நாம் உட்கொள்ளும் காற்றினால் நுரையீரல் விம்மிவிரியுமென்று முன்னமே கூறியுள்ளோம். நுரையீரல் விரியும்போது அது நாலாபக்கமும் எழும்பும். அப்போது அடிப்பாகம் வயிற்றையும் அதன் மூலமாகக் குடல்களையுங் கீழே நெருக்கித் தள்ள இவைகள் வயிற்றின்முன்பாகமாக எழும்பி நுரையீரலுக்கு இடங்கொடுக்கும். வயிற்றின்மீதுள்ள தோல் இவ்வித அசைவுக்கு விரிந்து இடங்கொடுக்கின்றது. ஆனால், இடைக் கச்சைகள் இந்த அசைவுக்குத்தக்கபடி தளர்ந்துகொடாவிடில், நுரையீரலும், வயிறுங், குடல்களும் ஒன்றோடொன்று நெருங்கப்பட்டு உடம்பிற்குச் சங்கடமும் நோயுமுண்டாகும். மூச்சுச் சரியாய் விட இயலாது. ஜீரணசக்தியுங் குறையும். பெண்களுக்கு கருப்பை இடம் விட்டு இடம் விலகிப் பல நோய்களுக்கிடமாகும். மூத்திரப்பை நெருக்கப்பட்டு அடிக்கடி நீரிறங்கும். குடல் நெருங்கி மலச் சிக்கல் உண்டாகும். இப்படிப் பலவகை வருத்தங்கள் இறுக்கமாகக் கட்டும் இடைக்கச்சைகளினால் உண்டாகின்றது. இதைக். கவனியாமல் நம் நாட்டு பெண்கள் ஒட்டியாணம் என்று வெள்ளியினாலாவது, பொன்னினாலாவது இடைக்கச்சை செய்து அவைகளினால் இடுப்பை இறுக்கிக் கட்டிவிடுகின்றார்கள். இதனால் வருங்கேட்டை அறியாமல் செய்கின்றார்கள்.

மருத்துவன் சந்தாதாரர்களுக்கு
விண்ணப்பம்

எனது தாயின் மரணத்தினாலும், பிறகு எனக்கு உடல் நலமின்மையினாலும் நமது மருத்துவன் பத்திரிகை 12-வது இதழ் 5-மாதங்களாக வெளிப்படுத்த வியலாமல் போனதற்கு அன்பர்கள் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நடத்துவதில் நமக்கு நஷ்டம் ஏற்படாத அளவு சந்தாதாரர்கள் ஆதரிக்காததினால் முதல் ஆண்டுடனே பத்திரிகையை நிறுத்திவிடலாமென எண்ணியிருந்தோம். இப்பத்திரிகையை நிறுத்திவிட்டால் இக்குலத்தவர்களின் முன்னேற்றத்திற்குச் சிறப்பாக வேறு ஒருபத்திரிகையும் இல்லாமையாலும், இதுவரை வெளிவந்த தமிழ் வைத்தியப் பத்திரிகைகளில் ஒன்றாவது நீடித்து நடைபெறாததாலும் இம் மருத்துவன் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்திவரவேண்டுமென்று பலர் மிக வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதினால் இவ்வாண்டும் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்துள்ளோம். இனி வெளிவரும் சஞ்சிகைகளைப் பார்ப்பவர் யாவரும் எங்ஙனமாயினும் இதற்கு ஒரு சந்தாதாரராகச்சேர ஆவல் கொள்ளும் வண்ணம் பல அரிய ஆராய்ச்சியுள்ள விஷயங்களை வெளியிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள்செய்திருக்கின்றோம். பலர் விருப்பப்படி சந்தாத்தொகை வருஷத்திற்கு 3 ரூபாவாயிருந்ததை 2 ரூபாவாக குறைத்திருக்கின்றோம். ஆகையால் பழைய சந்தா நேயர்கள் தங்கள் சந்தாத் தொகை 2 ரூபாவை மணியார்டர் மூலம் அனுப்புவதுடன் ஒவ்வொருவரும் தங்களாலியன்றவரை புதியசந்தாதாரர்களைச்சேர்த்து மருத்துவனை ஆதரிக்கப்பெரிதும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

எஸ். எஸ். ஆனந்தம்.

மருத்துவன் அன்பர்கள்.

T. நாராயணப் பண்டிதர், கல்வாசல்.
S. P. பூங்காவனம் பண்டிதர், சைதாப்பேட்டை, ஆரணிஜாகீர்.
V. K. ஆனந்தம், மருத்துவர் சங்கக் காரியதரிசி சிங்கப்பூர்.
M. K. சேது பிள்ளை, ஸ்லீக், லிகினி, அட்சை.
S. சீனிவாச பண்டிதர், சுங்குரும்பை.
தஞ்சான், கீழைத்தூர், திருவண்ணாமலை தாலுகா.
வை. ராமசாமி பண்டிதர், சுங்குரும்பை.
A. மாணிக்க முதலியார், இம்பீரியல் பாங்க், சென்னை.
சே. க. சின்னமுத்து, சிங்கம்புணரி. ராமநாதபுரம் ஜில்லா.

Rd. No. M. 2418

ரூபா 500 இனாம்!

எப்படி? விபரம் தெரிய அரை அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
தபாற் பெட்டி 99, சென்னை.

Regd. No. M. 2418

MARUTHUVAN

(PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly
Editor : Pandit S. S. Anandam
Sample Copy Free on Aplication

Add:—Manager.
MARUTHUVAN OFFICE
221, Mint Street, Madras.

சகலவித குஷ்டநோய்களுக்கும்

குடிநெய்

இம்மருந்து பதினெண்வகை குஷ்டநோய்கள், கருப்பத்தில் உண்டான மேகநோய்கள், நடுவில் தனது செய்கைத் தவறால் வந்த மேக நோய்களாகிய வெள்ளை, கிரந்தி வகைகள், புண், சதை அடைப்பு, நீரடைப்பு, லிங்கப்புற்று, யோனிப்புற்று, அறையாப் புக்கட்டி, கண்டமாலை, கருமேகம், செம்மேகம், வெண்மேகம், தோல் தடித்தல், உணர்ச்சி அற்று தோல் மறத்தல், தோல் வெடித்தல், தோல் சுருங்கல், தோல் புண்ணாகி நீர்வடிதல், கை, கால் விரல்கள் புண்ணாகிக் குட்டையாகுதல், விரல்கள் மடிப்புண்டாகுதல் முதலிய நோய்களையெல்லாம் மிகவிரைவில் குணமாக்கும் அருமருந்து.

இந்த நெய்யை உபயோகித்து குணமடைந்தவர்களின் நற்சாட்சியை எங்கள் மருந்து கேட்லாக்கில் காணலாம்.

ஒரு புட்டி விலை ரூ. 5-0-0
அரை புட்டி ரூ. 2-10-0

தமிழ் வைத்தியசாலை, 211, தங்கசாலைத் தெரு, சென்னை.

Printed by The Imperial Printing Works, No. 23, Davidson Street, Madras.
& Published by Pandit S. S. Anandam, No. 221, Mint Street, Madras.